கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(18.04.2021 - 18 சித்திரை 2021 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 11, கதிர் - 251, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 08 / NEWS / 2021

# ஞான ஒளி

GNANA OLI


ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05






# பூமியில் சிந்தப்பட்ட இரத்தம் இறைவனை நோக்கி கூக்குரலிடுகிறது

## தமிழ்ச் சமூகத்தின் உன்னத இரு காவலர்கள் ஒரே நாளில் மறைந்து போயினர்



மேதகு ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை

மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் கலாநிதி. மேதகு. இராயப்பு ஜோசப் ஆண்டகை 01.04.2021 அன்று இறைவனடி சேர்ந்தார். இவரின் நல்லடக்க வழிபாட்டு நிகழ்வு 05.04.2021 அன்று புனித செபஸ்தியார் பேராலயத்தில் சகல கத்தோலிக்க ஆயர்களின் மத்தியில் நடைபெற்றது.

அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளாரின் நல்லடக்கம் 06.04.2021 அன்று நடைபெற்றது. இவர்கள் இருவரினதும் ஆன்ம இறைவனில் இளைப்பாற ஞானஒளி பிரார்த்திக்கின்றது.



அருட்கலாநிதி. நீ. மரிய சேவியர் அடிகளார்.

**உமது முகத்தின் ஒளி எம்மீது வீசச் செய்யும் ஆண்டவரே. (தி.பா 4)**

# பாஸ்கு ஞாயிறு தாக்குதலின் 2வது வருட நினைவஞ்சலி வழிபாடுகள்



## கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல வழிபாடுகள்.

**திருவிழிப்பு நிகழ்வு 20 சித்திரை, 2021**

**நிகழ்ச்சி நிரல்:**

✠ 1வது திருமணித்தியாலம் : (மும்மொழிகளில்)
நேரம் : இரவு 08.00 - 09.00 மணிவரை
வழிநடத்துபவர்:**மேதகு ஜோசப் வியானி பர்னாந்து ஆண்டகை**

✠ 2வது திருமணித்தியாலம் : ஆங்கிலம்.
நேரம் : இரவு 09.00 - 10.00 மணிவரை
வழிநடத்துபவர் : **மேதகு அன்தனி ஜயகொடி ஆண்டகை**

✠ 3வது திருமணித்தியாலம் : சிங்களம்.
நேரம் : இரவு 10.00 - 11.00 மணிவரை
வழிநடத்துபவர் : **மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை**

✠ 4வது திருமணித்தியாலம் : தமிழ்
நேரம் இரவு 11.00 - நள்ளிரவு 12.00 மணிவரை
வழிநடத்துபவர் : **மேதகு P. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை**

**திருவிழாப்பு ஆராதனை – 20 சித்திரை, 2021**

**முதலாவது திருமணித்தியாலம் [இரவு 8 – 9 மணிவரை] பொது**

**நிகழ்ச்சி நிரல்:**

✠ வழி நடத்துபவர்; **மேதகு. ஆயர் ஜோசப் வியானி பர்னாந்து ஆண்டகை**

✠ மொழி : மும்மொழிகளிலும்.
- வருகை பாடல் - சிங்களம்
- முன்னுரை மும்மொழிகளிலும் (அருட் தந்தையர்களினால்)
- நற்செய்தி மேதகு ஆயர் ஜோசப் வியானி பர்னாந்து ஆண்டகை
- மறையுரை: மேதகு ஆயர் ஜோசப் வியானி பர்னாந்து ஆண்டகை
- விசுவாசிகளின் மன்றாட்டு - அருட்சகோதரிகள்
- பாதிப்புகளின் பிரதிபலிப்பு (திருத்தல அருட்பணியாளர்கள்)
- பாடல் - தமிழ்
- சுருக்க செபம் - மும்மொழிகளிலும்
- நற்கருணை எழுந்தேற்றம் - இலத்தின்
- இறுதி பாடல் - (வணங்குவோமே) - மும்மொழிகளிலும்

**இரண்டாவது திருமணித்தியாலம் [இரவு 9 –10]**

**நிகழ்ச்சி நிரல்:**

✠ வழிநடத்துபவர் : **மேதகு. அன்தனி ஜயகொடி ஆண்டகை**

✠ மொழி : ஆங்கிலம்.
- பிரதான முன்னுரை - **அருட்பணியாளர்**
- முதல் 15 நிமிடம் **– நல்லாயன் கன்னியர் அருட்சகோதரிகள்**
- இரண்டாவது 15 நிமிடம் **– கார்மேல் கன்னியர் அருட்சகோதரிகள்**
- மூன்றாவது 15 நிமிடம் **– ஆங்கில மறை ஆசிரியர்கள்**
- இறுதி 15 நிமிடம் - **மேதகு ஆயர் அன்தனி ஜயகொடி ஆண்டகை.**
- சுருக்க செபம் **– ஆங்கிலம்**
- நற்கருணை ஆராதனை **– ஆங்கிலம்**
- ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு முன்னும் பாடல் பாடப்படும். **[அனைத்து ஆங்கில பாடற்குழுக்கள் இணைந்து பாட அழைப்பு விடுக்கப்படுகிறது]**

**மூன்றாவது திருமணித்தியாலம் (இரவு 10 –11]**

**நிகழ்ச்சி நிரல்:**

✠ வழிநடத்துபவர் : **மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை**

✠ மொழி : சிங்களம்.
- பிரதான முன்னுரை **– அருட்பணியாளர்**
- முதல் 15 நிமிடம் **– சிங்கள மறை ஆசிரியர்கள்**
- இரண்டாவது 15 நிமிடம் **– மரியாயின் சேனை**
- மூன்றாவது 15 நிமிடம் **– திரு இருதய சபை**
- இறுதி 15 நிமிடம் **– மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை**
- சுருக்க செபம் - சிங்களம்
- நற்கருணை ஆராதனை - சிங்களம்
- ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு முன்னும் பாடல் பாடப்படும். **[அனைத்து சிங்கள பாடற்குழுக்கள் இணைந்து பாட அழைப்பு விடுக்கப்படுகிறது]**

**நான்காவது திருமணித்தியாலம் [இரவு 11 – 12]**

**நிகழ்ச்சி நிரல்:**

✠ வழிநடத்துபவர் : **மேதகு. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை**

✠ மொழி : தமிழ்.
- பிரதான முன்னுரை **– அருட்பணியாளர்**
- முதல் 15 நிமிடம் **– தமிழ் மறை ஆசிரியர்கள்**
- இரண்டாவது 15 நிமிடம் **– தமிழ் மரியாயின் சேனை**
- மூன்றாவது 15 நிமிடம் **– தமிழ் திரு இருதய சபை**
- இறுதி 15 நிமிடம் **– மேதகு. அன்ரன் ரஞ்சித் ஆண்டகை**
- சுருக்க செபம் - தமிழ்
- நற்கருணை ஆராதனை - தமிழ்
- ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு முன்னும் பாடல் பாடப்படும். **[அனைத்து தமிழ் பாடற்குழுக்கள் இணைந்து பாட அழைப்பு விடுக்கப்படுகிறது]**

**நிகழ்ச்சி நிரல் – 21 சித்திரை, 2021**

காலை 8.40 : முன்னுரை **அருட்பணி ஜோய் மரியரட்ணம் அடிகளார், அருட்பணி ஜூட் கிறிஸாந்த அடிகளார்**

வகாலை 8.45 : 2 நிமிட மௌன அஞ்சலி சமர்ப்பிக்கப்படும்.

காலை 8.47 : தேவாலய மணி ஓசையின்போது மெழுகுவர்த்திகளை ஏற்றி, பாஸ்கு ஞாயிறு பாடலைப் பாடுதல்.

காலை 8.50 : சமய தலைவர்களின் செபம் (வழிநடத்துவர் - திருத்தல பரிபாலகர்)

1. பௌத்த தேரர் - **வண. ஓமல்பே சோபித்த தேரர்.**
2. இந்து குருக்கள் - **வண. சிவா சுரேஸ் தலைமைக் குருக்கள்**
3. இஸ்லாம் மௌலவி - **அல்ஹாஜ் அசயிற் ஏஸ் சீக் பேராசிரியர் ஹசன் மௌலானா அவர்கள்**
4. **அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் உரை**
5. நன்றி நவினல் - பாஸ்கு ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவரால்

- பாஸ்கு ஞாயிறு பாடல்

காலை 9.30 : தமிழ் சிங்கள மொழிகளில் பேராயர் மெல்கம் கர்தினால் ஆண்டகை, மேதகு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை இணைந்து கூட்டுத்திருப்பலி நடைபெறும்.

காலை 11.00 : தானம் வழங்கப்படும். உலர் உணவு பொருட்கள் பாதிக்கப்பட்டவராகளால் பகிர்ந்தளிக்கப்படும்.

# நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம்

### மூன்று நாள் செப வழிபாடு ஆராதனை

**18 சித்திரை, 2021 – ஞாயிறு**

இரவு 07.00 - 08.00 மணிவரை திருமணித்தியால ஆராதனை

**19 சித்திரை, 2021 – திங்கள்**

இரவு 7.00 மணிக்கு பாதிக்கப்பட்ட 74 குடும்பத்தினரின் வீடுகளில் திருப்பலி ஒப்புக்கொடுத்தல்

**20 சித்திரை, 2021 – செவ்வாய்**

**இரவு 8.45 மணிக்கு**

115 விளக்குகளுடன் தேவாலயத்திற்குள் நுழைதல் விளக்குகளை இறந்தவர்களின் குடும்பத்தினரால் கொண்டுவரும் போது ஆராதனையை பேராயர் பீடத்திலிருந்து செபத்துடன் ஆரம்பிப்பார்.

**இரவு 08.45 – 10.00 மணிவரை**

கட்டுவாப்பிட்டி பங்கு மக்களுடன் கட்டான வட்டார அருட்பணியாளர்களும் இணைந்து நற்கருணை ஆராதனையில் செலுத்துவர். விசுவாச உயிரூட்டல் குழுவினால் வழிநடத்தப்படும்

**இரவு 10.00 – 11.00 மணிவரை**

கட்டுவாப்பிட்டி பங்கு மக்களுடன் நீர்கொழும்பு வட்டார அருட்பணியாளர்கள் இணைந்து நற்கருணை ஆராதனை இடம்பெறும். அருட்பணி டெறல் கூஞ்ஞு அடிகளாரினால் வழிநடத்தப்படும்.

**இரவு 11.00 – நள்ளிரவு 12.00 மணிவரை**

கட்டுவாப்பிட்டி பங்கு மக்களுடன் போலவலான வட்டார அருட்பணியாளர்கள் இணைந்து நற்கருணை ஆராதனை இடம்பெறும். அருட்பணி டெறல் கூஞ்ஞு அடிகளாரினால் வழிநடத்தப்படும்.

**நள்ளிரவு 12.00 மணி முதல் காலை 07.00 மணிவரை**

பங்கின் ஒழுங்கமைப்பின்படி ஒவ்வொரு மணித்தியாலமும் ஆராதனைகள் நடைபெறும்.

**காலை 07.15 – 8.15 மணிவரை**

விசுவாச உயிரூட்டல் குழுவினரால் செப ஆராதனை வழிநடத்தப்படும்.

**காலை 08.15 மணிக்கு** பாதிக்கப்பட்டவர்கள் ஏற்றிய 115 விளக்குகளை ஏந்தியவாறு ஊர்வலமாக நினைவுச் சின்னம் உள்ள இடத்திற்கு செல்வர். ஆயரும் அருட்பணியாளர்ளும் அவர்களின் இருக்கையில் அமர்ந்திருப்பர்.

**காலை 08.30 மணிக்கு** தூய ஆவியானவரின் ஆரம்ப பாடலும், ஆரம்ப செபம் மேதகு ஜே.டீ. அன்தனி ஆண்டகையினால் வழிநடத்தப்படும்.

**காலை 08.45 மணிக்கு** ஆலயமணி ஓசையின் பின் 2 நிமிட மௌன அஞ்சலி அனுஸ்டிக்கப்பட்டு, நினைவுச் சின்னப் பகுதியில் மெழுகு வர்த்திகளும் மலர்களும் செலுத்தப்படும்.

மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையினால், விஷேச வழிப்பாடும் சுருக்கமான மறையுரையும் நிகழ்த்தப்படும். பாஸ்கு ஞாயிறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டி, செபம் மேதகு ஜே.டீ அன்தனி ஆண்டகையினால் நடத்தப்படும்.

**காலை 09.15 மணிக்கு** பௌத்த தேரரினால் வழங்கப்படும் நிகழ்ச்சி.

**21 சித்திரை, 2021 – புதன்**

**மாலை 05.00 மணிக்கு** டேவிட் தோட்ட கல்லறையில் கர்தினால் ஆண்டகையும், ஆயர்களும், உயிர் தியாகம் செய்த வேத சாட்சிகளுக்காக, 115 சம்மனசு உடை அணிந்தவர்களுடன் வருகை தருவார்கள்.

செப வழிபாட்டின் பின் டேவிட் தோட்ட கல்லறையில், புதிதாக கட்டப்பட்ட செப இல்லம் திறந்து வைக்கப்படும்.

- கர்தினால் ஆண்டகையுடன் அனைத்து ஆயர்களும் செப இல்லத்தின் வளாகத்திற்கு வருகை தருதல். பேராயரினால் செப இல்லம் திறந்து வைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படும்.
- பிரதிநிதியின் செய்தி வாசிக்கப்படும்.
- பங்கு தந்தையின் நன்றி நவினல்.



- இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்ற தலைவர் மேதகு வின்சன்ட் பர்னாந்து (S.S.S) ஆண்டகையின் சுருக்கமான செப வழிபாட்டுடன் கல்லறை தோட்டம் ஆசீர்வதிக்கப்படும்.
- கல்லறைகளில் ஆயர்களும் சம்மனசுகளும் குடும்ப அங்கத்தவர்களும் மலர்களை செலுத்தி மெழுகுவர்த்திகளை ஏற்றுவர்.
- ஆயர்கள் பங்கு ஆலயத்தை நோக்கி செல்லல்.

**மாலை 06.00 மணிக்கு** ஆயர் பிரதான வாயில் அருகே வரவேற்கப்பட்டு பாஸ்கு ஞாயிறு மறை சாட்சிகளின் சினைவுச் சின்னம் வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தி, மௌன அஞ்சலியின் பின் குழு புகைப்படம் எடுத்தல்.

அருட்பணியாளர்களும் அருட்சகோதரிகளும் 269 மறை சாட்சிகளைச் சுற்றி ஆயர்களுடன் பவனி வருவர். ஆலய முகப்பில் ஆயர்களும் அருட்பணியாளர்களும் திருப்பலி ஆடையணிந்து பாஸ்கு ஞாயிறு மறைசாட்சிகளுக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்க ஆலயத்திற்குள் பவனியாக பிரவேசித்தல்.

கட்டுவாப்பிட்டி பங்கின் ஒழுங்கமைக்கப்பட்ட விஷேச அடையாள தானம் கொடுக்கப்படும். திருப்பலியின் பின் ஆயர்கள் பாதிக்கப்பட்டவர்களை சந்திப்பர்.

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
18 சித்திரை, 2021 ஞாயிற்றுக்கிழமை.

# "தாக்குண்டவர்களின் வலிகள் யாவற்றையும் இறைவன் பாதம் ஒப்படைப்போம்"

பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு தினம் கத்தோலிக்க ஆலயங்கள் இரண்டு, கிறிஸ்தவ ஆலயம் ஒன்று மற்றும் சுற்றுலா விடுதிகள் மீது குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான குண்டு தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நிறைவை நினைவுகூருகின்றோம். இத்தாக்குதல் நிகழ்ந்து இரண்டு வருடங்கள் கடந்தாலும், அவை பற்றிய நினைவுகள் இன்னும் எம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை. அவை ஏற்படுத்திய தாக்கங்கள் இன்னும் மக்கள் மத்தியிலும் மனதிலும் ஆறா வடுவை ஏற்படுத்தி உள்ளன. இவற்றிற்காக நீதி வேண்டி மக்களும் எமது பேராயரும் போராடிக் கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

இவ்வாறான மனிதத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முன்னறிவித்தல்கள் விடுத்திருந்த போதிலும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்காது இருப்பதும் எமக்கு வியப்பைத் தருகின்றது. மதிப்பிற்குரிய மனித உயிர்கள் இவ்வாறு அழிக்கப்பட்டதும் அழிக்கப்படுவதும் மாபெரும் குற்றமாகும்.

இந்நேரத்தில் தாக்குதலினால் உயிரிழந்த அனைத்து சகோதர சகோதரிகளினதும் ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டி பிரார்த்திப்பதோடு காயப்பட்ட மக்களையும், தாக்குதலினால் பாதிப்புக்குள்ளான மக்களையும், இந்நேரத்தில் நினைவுகூர்ந்து அவர்களுக்காக பிரார்த்திக்கவும் வேண்டுகின்றேன். அவர்களுடைய வலிகள் யாவையும் இறைவன் பாதம் ஒப்படைத்து செபித்து நிற்கின்றேன்.

மேலும், பாஸ்கா உயிர்ப்பு ஞாயிறு தாக்குதலின் இரண்டாம் வருட நினைவையொட்டி கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலும், கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்திலும் வழிபாடுகள் நடைபெறவுள்ளன. கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இம்மாதம் 20ஆம் மற்றும் 21ஆம் திகதி மும்மொழிகளிலும் வழிபாடுகள் நடைபெறும். கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்தில் இம்மாதம் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை வழிபாடுகள் நடைபெறும். எனவே கத்தோலிக்கர்களாகிய நாம் இவ்வழிபாடுகளில் பக்தியுடன் கலந்துகொண்டு இறந்து போனவர்களின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போம். காயப்பட்டவர்களை முடியுமானால் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் அளிப்போம்.

இம்மாதம் முதலாம் திகதி இறைவனடி சேர்ந்த மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு. இராயப்பு ஜோசப் ஆண்டகையின் ஆன்மா இறைவனில் இளைப்பாற பிரார்த்திக்கின்றேன். ஆயர் அவர்கள் தமது மறைமாவட்டத்திற்காக ஆற்றிய பணிகள் சொல்லிடங்காதவை எனலாம்.

இறையாசீருடன்
ஆசிரியர்



# ஏம் இறைவா! ஏம் இறைவா!
# ஏன் எம்மை பரிதவிக்கவிட்டீர்.

ஆக்கம். அருட்சகோ. R. ஜோசப் ஜெயகாந்தன்.

கடந்த உயிர்த்த ஞாயிறு (21.04.2019) அன்று எமது நாட்டிலே 3 தேவாலயங்களிலும், 3 நட்சத்திர விடுதிகள் உட்பட எட்டு இடங்களில் இடம்பெற்ற தொடர் தற்கொலைத் குண்டுத் தாக்குதலில் உயிர்நீத்த சுமார் 360க்கும் மேற்பட்ட உள்நாட்டவர், வெளிநாட்டவர்கள் அனைவரின் ஆன்மாக்களும் இறைவனில் இறைப்பாறவும், காயமடைந்த சுமார் 400க்கும் மேற்பட்டோர் விரைவில் பூரண குணமடையவும், நடைபெற்ற அனர்த்தத்தினால் உறவுகளை, உடன்பிறப்புக்களை இழந்து, மீளாத் துயரில், செய்வதறியாது திகைப்போடும், அங்கலாய்ப்போடும், அவவிசுவாசத்தோடும் வாழும் அனைவரும் திடமும் ஆறுதலும் பெற்று விசுவாசத்தில் ஆழமாகிடவும் இறைவனைப் பிராத்தித்து இத்தாக்குதல் பற்றிய ஒரு தொகுப்பைத் தரமுனைகின்றேன்.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப்பட்ட இலங்கை 1996ம் ஆண்டு கிரிக்கட் உலகப் கோப்பையைக் கைப்பற்றியவுடன் இன்னும் ஒருபடி முன்னேறி வெளிநாட்டவர்களால் பேசப்படவும், வந்து தரிசிக்கும் ஆசியாவின் அதிசயமாகவும் கருதப்பட்ட இலங்கை கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிறு அன்று மரித்த ஞாயிறாக, உயிர்பறித்த (Black Sunday) கறுப்பு ஞாயிறாக மாறி உலகிலேயே 3000 பேருக்கும் மேல் காவு கொண்ட அமெரிக்க இரட்டைத் தொடர் மாடிக் கட்டிடத்தின் தாக்குதலுக்குப் பின் நடந்தேறிய ஒரே நாளில் 8 தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 360 பேரைச் சூறையாடிய மிகப் பெரிய பயங்கரத் தாக்குதல் இடம்பெற்ற பயங்கர இடமாகக் கருதப்படுமளவிற்கு பின்னேறியுள்ளமை இலங்கையர் எமக்கு வேதனை தருவதாக அமைகின்றது.

கத்தோலிக்கர்களுக்கும், ஏனைய மதத்தவர்களுக்கும் இன, மொழி, கடந்து வணங்கும், அருட்கொடைகளை வாரி வழங்கும் உலகம் போற்றும் தூயவராம் கொழும்பு கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தல-த்திலும், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய தூய செபஸ்தியார் திருத்தலத்திலும், மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திலும் கிறிஸ்தவ, கத்தோலிக்க மக்களை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களை பார்த்த மக்கள் இன்று கேட்கும் கேள்வி "எமது வேதனைகளுக்கு ஆறுதல் பெற இறைவனை நாடி அவர் குடியிருந்த தேவாலயங்களை அண்டி வந்து எமது தேவைகளை முறையீடு செய்வோம், ஆனால் இன்று அந்த தெய்வமே எம்மைக் கைவிட்டு எம்மவரின் வாழ்வை அழித்து விட்டாரே" என்பதுதான்.

மனிதர்களுக்கு துன்பம், கஷ்டம், வேதனை, துயரம், சோதனை, மரணம் வரும்போது கடவுளையே கேள்விகேட்டு, குறை சொல்லி முறையிடுகின்றோம். "கடவுளே ஏன் எம்மைப் பரிதவிக்க விட்டீர்?" என்று. ஆனால் இயேசு இத்தனை துன்ப துயரங்களை அனுபவித்தாலும் கடவுளிடம் குறைகூறி முறையிடவில்லை. புலம்பவில்லை. மாறாக திருப்பாடல் 22ஐச் செபித்து தம் தந்தையின் மீதுள்ள ஆழ்ந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தி வெளிப்படுத்துகின்றார். இதனை நாம் யோபுவின் வாழ்வில் (யோபு 1:21-22), எரேமியா வாழ்வில் (எரே 20:7-18), சீடர்கள் வாழ்வில் (தி.ப 4:20, 5:29, 41-42), இயேசுவின் பணி வாழ்வில் (யோவா 16:32) காண்கின்றோம்.

இறைமகன் இயேசு தம் பணி வாழ்வில் ஒரு நாளும் தம் பணியைப் பற்றியோ, சீடர்களைப் பற்றியோ, வேறு எதைப்பற்றியும் தந்தையிடம் குறைசொல்லவில்லை. தலைமைக் குருக்கள், பரிசேயர், மக்கள் எல்லோரும் இயேசுவைப் பற்றி, அவரின் பணிச் செயல்களைப் பற்றிக்குறை கூறினார்கள். இயேசுவின் உள்ளத்தில் தம் தந்தையின் திருவுளத்தை நிறைவு செய்யவேண்டும் என்ற ஆசை ஒரு புறம், பாடுகள் சிலுவை மரணத்தைக் கண்டு அச்சம் மறுபுறம், அச்சம் அழியும் இடத்தில்தான் கடவுளின் ஆசை நிறைவேறுகின்றது. இயேசு தம் உள்ளத்தில் எழுந்த அச்சத்தை அழித்தார். அப்படிப்பட்ட இயேசு தன் வாழ்வில் இருமுறை மட்டுமே - கெத்சமனித் தோட்டத்தில், சிலுவையில் இருந்து தந்தையைச் சத்தமாக கூப்பிட்டார். அப்படிக் கூப்பிட்டுச் செபித்தது தந்தை தன்னோடு இருக்கின்றார் என்ற உடனிருப்பை உறுதி செய்து கொள்ளத்தான்.

எனவே இந்த துன்பகரமான சூழ்நிலையில் மற்றவர்களைப் பழிவாங்குவதிலும், சந்தேகக் கண்ணோடு நோக்குவதிலும், ஒருவர் ஒருவரைக் குறைகூறுவதிலும் எமது நேரத்தையும், செயற்பாடுகளை முடக்கிவிடாமல் அன்னை மரியாளைப் போன்று (தூய அந்தோனியார் திருத்தலத்திலே....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# உண்மை உறைக்கும்



நன்றி : இணையத்தளம்

# பாஸ்கு தாக்குதல் தொடக்கம் இன்று வரையான செய்திகளின் தொகுப்புக்கள்...



## பூமியில் சிந்தப்பட்ட இரத்தம் இறைவனை நோக்கி கூக்குரலிடுகிறது

அசம்பாவிதங்களை நடாத்தியவர்களுக்கு இறைவனின் தீர்ப்பிலிருந்து தண்டனை நிச்சயம்

இலங்கை குறித்து திருத்தந்தையின் மீளாத் துயரம்

## பாஸ்கா ஞாயிறன்று நடந்த கொடூரம்

## இந் நாட்டின் மண்ணை இரத்தத்தினால் நனைக்க வேண்டாம்





## எமது மக்களுக்கு நியாயம் வழங்காத எந்த அரசுக்கும் எனது ஒத்துழைப்பு கிடைக்காது!

விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு வலியுறுத்தி

## அடிப்படைவாத நோக்கத்தையும், மதவாதத்தையும் புறந்தள்ளி உண்மையைச் சொல்ல இந்நேரத்தைப் பயன்படுத்த வேண்டும்;



அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உரோமையில் லௌறண்டினாவில் ... மக்களின் வாழ்க்கை அழிக்கப்பட்டுள்ளது. மேலாக பௌத்த நாகரீகத்தில் வளர்ந்த

## யார் என்ன சொன்னாலும் பாஸ்கு ஞாயிறு தாக்குதலிற்கு உள்ளான மக்களுக்கான நியாயத்தை பெற்றுக்கொடுக்க முன்நிற்பேன்.

## உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குப் பின்னரான சூழ்நிலை குறித்து ஆராயப்பட்டவை தொடர்பான இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அறிக்கை



## மீண்டும் விதைக்கப்பட்ட மறைசாட்சிகள்!!

## 'எனது உணர்வுகளை பகிர்ந்து கொள்ளவே அழைத்தேன்'

கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த பேராயர்

2020. ஏப்ரல் 21ம் திகதி பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் விசேட செய்தி.

பாஸ்கு குண்டுத் தாக்குதல் இடம்பெற்று ஒருவருடத்தை கடக்கின்ற போதிலும் அதைப் பற்றிய எவ்வித ...களும் செய்ய வில்லை.



குண்டு தாக்குதலின் ஒரு வருட நிறைவு



## 2019 பாஸ்கு ஞாயிறு தற்கொலை தாக்குதல் நடைபெற்று ஒருவருட நினைவு கூர்தல்

2020. ஏப்ரல் 21ம் திகதி பேராயர் அதிமேதகு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் விசேட செய்தி.

2020. சித்திரை 21ம் திகதி பேராயர் அதிமேதகு மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் விசேட செய்தி.

திட்டமிடப்பட்ட மனித படுகொலை இதில் நேரடியாகத் தொடர்புடையோருக்கும், கடமைகளைத் தவறவிட்டவர்களுக்கும், சட்டம் நீதி வழங்கட்டும் உண்மையை வெளிப்படுத்துங்கள்





சித்திரை 21ம்திகதி எமது மக்களுக்கு நீதிக் கிடைக்காவிடின் எமது எதிர்ப்பை வலுப்படுத்தி, இலங்கை முழுவதும் முன்னெடுப்போம்

பாஸ்கு விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை



## முழுமையற்றிருப்பதால் எமக்கு அதில் திருப்தி இல்லை





# இறைவன் நமக்காகப் போராடுவார்!

## “இது உங்களுடைய போர் அல்ல, என்னுடைய போர். நீங்கள் அமைதியுடன் இருந்து ஆண்டவர் செய்யப்போகும் மகத்துவங்களைப் பாருங்கள் ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார்”

தொடக்கத் திருச்சபையின் காலத்தில் உரோமையில் கி.பி 400 ஆண்டுகள் கிறிஸ்துவின் பிள்ளைகள் வேதகலாபனையால் மிகுந்த துன்பம் அனுபவித்து வந்தார்கள். கொடிய மிருகங்களுக்கு இரையாகப் போடப்பட்டார்கள். சிரச்சேதமும், வாளால் வெட்டுண்டு வேதசாட்சிகளாகவும் மரித்தார்கள்.

இக்காலச் சூழ்நிலையில் மேக்சிமியன் என்ற கொடுங்கோல் மன்னனின் இராணுவத்திலும் கிறிஸ்துவைப் பின்பற்றிய இராணுவ வீரர்கள் இருந்தார்கள். இச்சமயத்தில் பொகிமியா நாட்டு படைகள் உரோமைப் படைகளைச் சூழந்துகொண்டு பெரும் தாக்குதலில் உரோமை வெற்றி கொள்ள படைவீரர்களின் கோட்டையை சூழ்ந்துகொண்டார்கள்.

கோட்டைக்குள் இருந்த மக்களும் படைவீரர்களும் தண்ணீரும், உணவும் இன்றி சாகும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அரசன் மேக்சிமியன் கலக்கமடைந்தார். கலங்கினார். எதிர்வரும் பெரிய ஆபத்தை உணர்ந்தார். உடனே அவர் கிறிஸ்துவின் படைவீரர்களை நோக்கி இந்த ஆபத்திலிருந்து விடுதலை பெற நீங்கள் இரட்சகர் என விசுவசிக்கும் இறை இயேசுவிடம் செபியுங்கள் என்றார்.

விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் அவர்கள் செபிக்க ஆரம்பித்த சில மணி நேரத்திலேயே பெருமழை கொட்ட ஆரம்பித்தது. தண்ணீர் கரைபுரண்டு ஓடியது. தண்ணீரிலும், ஆகாயத்திலும் உணவருந்திய இராணுவம் திடமடைந்து பொகிமியா படையை எதிர்கொண்டு வெற்றி பெற்றார்கள். கிறிஸ்துவின் பிள்ளைகளுக்கும், நாட்டிற்கும் சமாதானம் பிறந்தது.

400 ஆண்டுகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்து கானான் நோக்கி வந்து கொண்டிருந்தபோது செங்கடலால் வழிமறிக்கப்பட்டார்கள். எகிப்தின் படைகளாலும் பின்தொடரப்பட்டார்கள். கலங்கிய நிலையில் மோயிசன் கலங்கியபோது ஆண்டவர் மோயிசன் வழியாக “இது உங்களுடைய போர் அல்ல, என்னுடைய போர். நீங்கள் அமைதியுடன் இருந்து ஆண்டவர் செய்யப்போகும் மகத்துவங்களைப் பாருங்கள் ஆண்டவர் உங்களுக்காகப் போராடுவார்” என்கிறார். அப்படியே செங்கடல் இரண்டாய் பிரிகிறது. இஸ்ரயேலர் நடந்து கடலைக் கடந்தார்கள். அதே கடலில் எகிப்தின் படைகள் அழிந்தன. (வி.ப 14:10-14)

இஸ்ரயேல் மக்கள் கானான் நோக்கிய பயணத்தில் எரிக்கோவின் கோட்டையை எதிர்கொள்கிறார்கள். இறைவன் யோசுவாவின் மூலம் பேசினார். அதன்படியே ஏழு நாள்கள் அக்கோட்டையைச் சுற்றி வந்தார். இறைபுகழ் பாடிக்கொண்டே கோட்டையைச் சுற்றிவந்த அவர்களுக்கு கோட்டை ஏழாம் நாளில் உடைந்து வெளிப்புறமாக விழுந்தது. ஏனெனில் கோட்டையைச் சுற்றி அகழியின் பள்ளம் இருந்தது. விழுந்த கோட்டைச் சுவர் அப்பள்ளங்களை மூடியது. எனவே, மிக எளிதாக இஸ்ராயேலர் எரிகோவைக் கைப்பற்றினார்கள்.

இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வழிநடத்த வந்த மோயிசன் இறுதிக் காலத்தில் இஸ்ராயேலர்கள் அமலேக்கியருடன் எதிர்கொண்டு போரிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். எனவே, இராப்பிதின் என்ற இடத்தில் போர் ஆரம்பித்தது. மோயிசனோ அவர்கள் வெற்றி பெற வேண்டுமென்று ஒரு மலைக்கு ஆரோன், கூர் என்ற இரண்டு பேரை அழைத்துக் கொண்டு செல்கிறார். மலையிலிருந்த பாறையின் மீது மண்டியிட்டு செபிக்க ஆரம்பிக்கிறார். கைகளை உயர்த்தி அவர் செபிக்க, செபிக்க அங்கிருந்த இஸ்ராயேலர் முன்னோக்கிச் சென்று வெற்றி பெறுவதைக் காண்கிறார். கைகள் வலியால் தாழும்போது இஸ்ரயேலின் படைகள் பின்னோக்கி வருகிறார்கள்.

எனவே இரண்டு பேர் மோசேயின் இரு பக்கத்திலும் இருந்துகொண்டு அவரின் இரு கைகளையும் தாங்கி, கரங்கள் வானோக்கி எழும்பி செபிக்க செபிக்க இஸ்ரயேல் மக்கள் வெற்றி பெற்று மகிழ்வடைகிறார்கள் (வி.ப 14:8-13). மேலும் நாம் 2 குறிப்பேடு 20ஆம் அதிகாரத்தை எடுத்து வாசித்தால் ஜோசபாத்து என்ற எருசலேம் மன்னன் எப்படி பகைவர்களை வென்றான் என்பதைக் காணும்போது கடவுளின் கருணையைக் காண்கிறோம். ஜோசபாத் மன்னனை மிக எளிதாக வென்று விடலாம் என்று மோவாபியரும், அம்மோனியரும், மெயூனியரும் ஒன்றுசேர்ந்து எருசலேம் மீது படையெடுத்து வருகிறார்கள். இறைபக்தி நிறைந்த ஜோசபாத் பயந்த நிலையில், தனி அறையில் இறைவனைப் பார்த்து செபிக்கிறார். அவ்வாறே யூத மக்கள் அனைவரையும் ஒன்றுகூட்டி, நோன்பு, காக்க கட்டளையிடுகிறார்.



ஜோசபாத்தும், யூத மக்களும் ஒன்றுகூடி உபவாசித்து செபிக்கிறார்கள். அனைவரும் செபிக்கும்பொழுது தூய ஆவியானவர் கயகாசியேவின் மேல் இறங்கினார். ஆண்டவர் அவன் மூலமாய் இவ்வாறு பேசுகிறார்... **“நீங்கள் எதிரியின் பெரும் படையை கண்டு அஞ்சவும் வேண்டாம், நிலை கலங்கவும் வேண்டாம். இப்போர் கடவுளின் போரே அன்றி, உங்களுடைய போர் அன்று”** என்கிறார்.

அடுத்து இறைவனின் அருள்துணையை நம்பி ஜோசபாத் மன்னன் தன் சிறிய படையுடன் அம்மூவரையும் எதிர்கொள்கிறார். முப்படைகளும் இச்சிறு படையைக் கண்டு “நாம் ஒருவரே இவனை வென்றுவிடலாம். ஒவ்வொருவரும் நினைத்து அவர்களுக்குள்ளே சண்டையிட்டு அனைவரும் மடிந்தார்கள். அவர்களின் படைக் கருவிகளையும், ஆயுதங்களையும் யூதப் படைவீரர்கள் எருசலேமில் கொண்டு சேர்க்க மூன்று நாள்கள் ஆனது. ஜோசபாத் மன்னர் இறைவனின் அருள் துணையால் வெற்றியடைந்தார்.

இன்றைய நாட்களில் எம் நாட்டின் நிலையைக் கண்டு கலங்காதிருப்போம். இக்கொடூர சம்பவத்தினால் பீதி அடைந்திருக்கும் மக்களே, உறவுகளை இழந்து தனிமையில் வாழுபவர்களே, சொந்தங்களை இழந்து சோகத்தில் இருப்பவர்களே, இனி என்ன நடக்குமோ என்று கலங்கி கொண்டிருப்பவர்களே, இன்னும் எங்களுக்கு நீதியான முடிவு கிடைக்கவில்லையே என்று ஏங்கிக் கொண்டு இருப்பவர்களே, இதோ, இறைவன் கூறுகின்றார். உனக்காக நான் போராடுவேன். எமது நாடு ஆபத்துக்குள்ளாகி வருகிறது என்று எண்ணுவார்க்ள. இன்னுமொரு கலாபனைக்கு முகம்கொடுத்து வருகின்ற திருச்சபை, இவற்றுக்கு எல்லாம் தீர்வு இல்லையா?



என்று ஏங்கும் அன்பர்களுக்கு இறைவன் கூறுகின்றார் உங்களுக்காக நான போராடுவேன்.

### திருப்பாடல் 91

**உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர். ஆண்டவரை நோக்கி, ‘நீரே என் புகலிடம் என் அரண், நான் நம்பியிருக்கும் இறைவன்’ என்று உரைப்பார். ஏனெனில், ஆண்டவர் உம்மை வேடரின் கண்ணியினின்றும் கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார். அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார், அவர்தம் இறக்கைகளின்கீழ் நீர் புகலிடம் காண்பீர், அவரது உண்மையே கேடயமும் கவசமும் ஆகும். இரவின் திகிலுக்கும் பகலில் பாய்ந்துவரும் அம்புக்கும் நீர் அஞ்சமாட்டீர்.**

**இருளில் உலவும் கொள்ளை நோய்க்கும் நண்பகலில் தாக்கும் கொடிய வாதைக்கும் நீர் அஞ்சமாட்டீர். உம் பக்கம் ஆயிரம்போர் வீழ்ந்தாலும், உம் வலப்புறம் பதினாயிரம் பேர் தாக்கினாலும், எதுவும் உம்மை அணுகாது. பொல்லார்க்குக் கிடைக்கும் தண்டனையை நீரே பார்ப்பீர், உம் கண்ணாலேயே நீர் காண்பீர். ஆண்டவரை உம் புகலிடமாய்க் கொண்டீர் உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர். ஆகவே, தீங்கு உமக்கு நேரிடாது, வாதை உம் கூடாரத்தை நெருங்காது. நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி, தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார். உம் கால் கல்லின்மேல் மோதாதபடி, அவர்கள் தங்கள் கைகளில் உம்மைத் தாங்கிக்கொள்வர். சிங்கத்தின்மீதும் பாம்பின்மீதும் நீர் நடந்து செல்வீர், இளஞ்சிங்கத்தின்மீதும் விரியன் பாம்பின்மீதும் நீர் மிதித்துச் செல்வீர். அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால், அவர்களை விடுவிப்பேன், அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன், அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது, அவர்களுக்குப் பதிலளி-ப்பேன், அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன், அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன், நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன், என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.** இத்திருப்பாடலை நாள்தோறும் கூறி இறைவனிடம் செபிப்போம், அவர் நமக்காகப் போரிடுவார்.

# முன்னால் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதி மேதகு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை

## மறைந்த ஓராண்டு நினைவு!

தமிழாக்கம்:
அருட் சகோ. R ஜோசப் ஜெயகாந்தன்





**கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் ஆயராகிய முதல் மறைமாவட்ட குருவும் 25 ஆண்டுகளாக இறைமக்களை ஆன்மீக வழியில் வாழ வழிகாட்டிய பேராயரும் இவரேயாவார். அவர் பிறந்து நடைபயின்ற பாதைகளின் தொகுப்பு பின் வருமாறு:**



பிறப்பு: 1932ம் ஆண்டு மார்கழி மாதம் 06ம் திகதி நீர்கொழும்பு, முன்னங்கரை.

பெற்றோர்: குருகுலசூரிய வில்விரட (தந்தை), லில்லி மேரி மார்கிறட் (தாயார்)

ஆரம்பக் கல்வி: றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை முன்னக்கரை இரண்டாம் நிலைக் கல்வி: புனித மரியாள் கல்லூரி பெரியதெரு, நீர்கொழும்பு

1945ம் ஆண்டில் புனித அலோசியஸ் சிறிய குருமடத்தில் நுழைந்தார்.

1949ம் ஆண்டில் SSC பரீட்சையில் சித்தியெய்து இலண்டன் பல்கலைக்கழக நுழைவுக்குத் தயாரானார்.

1951ம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவுப் பரீட்சையில் தேற்றினார்.

1953ம் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலைமானிப் பரீட்சைக்குத் தோற்றினார். அதே ஆண்டிலேதான் அம்பிட்டிய பெரிய குருமட்டதில் மெய்யியல் கற்பதற்காக நுழைந்தார்.

1954ம் ஆண்டில் அவர் உரோமாபுரிக்கு உயர்கல்வி கற்பதற்காக அனுப்பிவைக்கப்ட்டார்.

1956ம் ஆண்டில் உரோமாபுரியில் உள்ள ஊர்பானா பல்கலைக் கழகத்தில் இணைந்து தகுதிப்பட்டத்தை மெய்யியலிலும், தகுதிச்சான்றுப் பட்டத்தை மெய்யியலிலும் பெற்றுக்கொண்டார்.

1958ம் ஆண்டில் இறையியலில் குறைந்த தகுதிப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

1959ம் ஆண்டில் குருத்துவ அருட்சாதனத்தை உரோமாபுரியில் அதிமேதகு கர்தினால் அதாஜினானியன் ஆண்டகையினால் பெற்றுக் கொண்டார்.



1960ம் ஆண்டில் இறையியலிலும் தகுதிச்சான்றுப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அதே ஆண்டிலே பம்பலப்பிட்டி, புனித பேதுரு கல்லூரியில் ஆசிரியப்பணியாற்ற நியமிக்கப்பட்டார்.

1965ம் ஆண்டில் பொரள்ளை புனித அலோசியஸ் சிறிய குருமடத்தின் அதிபராக நியமனம் பெற்றார்.

1973ம் ஆண்டில் மீண்டும் உரோமாபுரிக்குச் சென்று தனது முனைவர் பட்டத்தை ஒழுக்க இறையியலில் கற்கத் தொடங்கினார்.

1976ம் ஆண்டு முனைவர் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். அதே ஆண்டிலே தாய்நாடு திரும்பி தேசிய குருமடத்தில் விரிவுரையாளராகப் பணியாற்ற நியமிக்கப்பட்டார்.

1977ம் ஆண்டில் தனது 44 வயதில் திருந்தந்தை 6ம் சின்னப்பரினால் ஆயராக நியமிக்கப்பட்டார்.

1977ம் ஆண்டில் பேராயர் தோமஸ் கர்தினால் கூரே ஆண்டகையினால் ஆயராக அபிசேகம் செய்யப்பட்டார்.

1989ம் ஆண்டில் இலங்கை ஆயர் பேரவையின் தலைவராக நியமனம் பெற்றார்.

2002ம் ஆண்டில் தனது ஆயர்த்துவத்தின் 25ம் ஆண்டு நிறைவு விழாவை (வெள்ளிவிழா) கொழும்பு புனித லூசியால் பேராலயத்தில் கொண்டாடினார்.

2009ம் ஆண்டில் தனது குருத்துவத்தின் 50ம் ஆண்டு நிறைவுப் பொன்விழாவை நீர்கொழும்பு பெரிய தெரு புனித மரியன்னை ஆலயத்தில் கொண்டாடினார்.

2019ம் ஆண்டில் தனது குருத்துவத்தின் 60ம் ஆண்டு வைரவிழாவைக்கொண்டாடினார்.

2020ம் ஆண்டு சித்திரை மாதம் 10ம் திகதி விண்ணக வாழ்வை உரிமயாக்கிக்கொண்டார்.



**இவரின் ஆன்மா, இறைவனில் இளைப்பாற ஞான ஒளி பிரார்த்திக்கிறது!**



**இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள்.** ›› பேதுரு ‹‹

# இறைவார்த்தை வழிபாடு

## பாஸ்கா காலத்தின் 3வது ஞாயிறு (18.04.2021)

**வாசக விளக்கம்:** உயிர்ப்புக் காலத்தின் 3வது வாரத்தில் கால்பதிக்கும் திருஅவையின் இறைமக்களாகிய நாம் எத்தகைய பாவங்களை செய்திடினும் அதிலிருந்து மனம் மாறி கடவுளிடம் திரும்பி வரவேண்டும் என்பதே இன்றைய வாசகங்களின் மையக் கருத்தாக அமைந்திருப்பதை உணர்த்துகின்றன. “பாவ மன்னிப்பு பெற மனம் மாறுங்கள்” என்று நற்செய்தியும், “தம் பாவங்களுக்கான கழுவாய் இயேசுவே” என்று இரண்டாம் வாசகமும், மனம்மாறி கடவுளிடம் திரும்பிவர வேண்டும் என முதல் வாசகமும் குறிப்பிடுகின்றன. நற்செயல்களுக்கு இட்டுச் செல்லாத மனமாற்றம் உண்மையான மனமாற்றம் அல்ல, மனித வாழ்வு தண்ணீரைப் போன்று நற்செயல்கள் வழியாக முன்னோக்கி ஓடிக்கொண்டிருக்கவில்லை என்றால் தேங்கிய குட்டையாய் மாறிவிடும். அது நாற்றம் எடுக்க ஆரம்பிக்கும். ஆகவே மனமாற்றத்திற்குப் பிறகு நற்செயல்களில் ஈடுபடாத எந்த மனிதனும் மீண்டும் பாவத்தை நோக்கி செல்வதற்கு தன்னையே தயார்படுத்துகிறார் என்பதை நாம் உணர்வது அவசியம். மேலும் இன்றைய நற்செய்தியில் வழியில் சந்தித்த சீடர்களின் மத்தியில் பேசும்போது “அமைதி உங்களுக்கு உரித்தாகுக!” என்று கூறுகின்றார். அத்துடன் மறைநூலைப் புரிந்துகொள்ளுமாறு அவர்களுடைய மனக்கண்களையும் திறக்கின்றார். உயிர்ப்புக் காலத்தில் பயணிக்கும் நாம் இறைவார்த்தையை புரிந்து கொண்டவர்களாக உயிர்ப்பின் மகிழ்ச்சியில் வாழ நாமும் மனம்மாறி மற்றவர்களும் மனம் மாறி வாழ உதவும் மக்களாக மாற இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தி.ப 3: 13–15, 17–19**
வாழ்வுக்கு ஊற்றானவரை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். ஆனால் கடவுள் அவரை உயிரோடு எழுப்பினார்.

**பதிலுரைப் பாடல் : தி.பா 4: 1, 6, 8**
உமது முகத்தின் ஒளி எம்மீது வீசச் செய்யும் ஆண்டவரே.

**இரண்டாம் வாசகம் : 1 யோவா 2: 1–5**
நம் பாவங்களுக்குக் கழுவாய் அவரே, அனைத்துலகின் பாவங்களுக்கும் கழுவாய் அவரே.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவராகிய இயேசுவே, மறைநூலை எங்களுக்கு விளக்கியருளும். நீர் எம்மோடு பேசும்போது எம் உள்ளம் பற்றி எரியச் செய்தருளும். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக்கா 24: 35–48**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

மனமாற்றத்தின் காலமான உயிர்ப்பின் காலத்திலே கடவுளிடம் திரும்பி வாருங்கள். கடவுள் நம் பாவங்களை மன்னிக்கிறார் என்ற நம்பிக்கையூட்டி நம்மை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர் ஆகிய அனைவரையும் உமது வல்லமையால் நிரப்பி ஆசீர் வழங்க வேண்டுமென்று...

நாம் எத்தகைய பாவங்களை செய்திடினும் அதில் இருந்து மனம்மாறி கடவுளிடம் திரும்பிவர வேண்டும் என்பதை உணர்ந்தவர்களாக திருந்திய உள்ளத்தினராய் எப்போதும் வாழவும் பேதுருவைப் போல இயேசுவை தெரியாதவர்களுக்கு இயேசுவைப் பற்றி எடுத்துச் சொல்லவும் அவரது வார்த்தைகளை ஏனையோர்க்கும் பறைசாற்றி வாழவும் தயைபுரிய வேண்டுமென்று...

நம்மை நற்செயல்களுக்கு இட்டுச் செல்லாத மனமாற்றம் பயனற்றது என்பதை உணரவும், இயேசுவைப் போல் எல்லோரையும் சமமாக மதித்து சேவையாற்றவும் கலங்காதே, அஞ்சாதே எனக் கூறும் இயேசுவை உறுதியாக பற்றிக்கொண்டு எம்மாவுஸ் சீடரைப்போல மனம் திருந்தி வாழவும் தேவையான வரங்களை தந்தருள வேண்டுமென்று...

## பாஸ்கா காலத்தின் 4வது ஞாயிறு (25.04.2021)

**வாசக விளக்கம்:** திருஅவையின் இறைமக்களே அன்பின் சொந்தங்களே இன்றைய நற்செய்தியில் இயேசு தன்னை நல்ல ஆயனாக உருவகப்படுத்தி திருத்தூதர்களோடு உரையாடுகின்றார். நல்லாயன் இயேசு தன் மக்கள் மேல் தனக்கிருந்த எல்லையில்லா அன்பையும் பற்றுறுதியையும் வெளிப்படுத்த, அவர்களுக்காக தன் உயிரையே கொடுக்கத் துணிகின்றார். இன்றைய சூழலில் பல நாடுகள் நல்ல தலைவர்கள் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருக்கின்றன. உண்மையும் நீதியும் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் இயேசுவின் நல்லாயன் பற்றிய உவமை நமது உள்ளத்தில் பல சிந்தனைகளை தோற்றுவிக்கின்றன. “என் ஆடுகளை நானறிவேன், அவையும் என்னை அறியும்” என்கிறார் இயேசு. ஏனெனில் நமது உள்ளங்களை அறிபவர் அவர் ஒருவரே. நல்லாயனை நம்பும் ஆடுகளை அவர் நீர் நிலைகளுக்கும், பசும்புல் மேய்ச்சலுக்கும் அழைத்துச் செல்கின்றார். தனது அன்பை புரிந்து கொள்ளாத, ஏற்றுக் கொள்ளாத மக்களுக்காக தனது ஒரே மைந்தனை நல்லாயனாக அனுப்பி, அவர்களையும் அன்பு செய்கின்றார். எனவே சீரழிந்து சின்னா பின்னமாகிக் கொண்டிருக்கும் சமூக வாழ்வை சீர்படுத்த ஆங்காங்கே நல்ல ஆயன்களாக தலைவர்கள் பலரும் தோன்ற வேண்டும். அவர்கள் இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்கி புதிய உலகை உருவாக்க வேண்டும். இதற்கான இறையருளை வேண்டிட திருஅவையுடன் சேர்ந்து நாமும் செபிப்போமாக.

**முதல் வாசகம் : தி.ப 4: 8–12**
இயேசுவினாலே அன்றி, வேறு எவராலும் மீட்பு இல்லை.

**பதிலுரைப் பாடல் : 118: 1,8–9. 21–23, 26,28–29**
கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்தின் மூலைக்கல் ஆயிற்று!

**இரண்டாம் வாசகம் :1 யோவா 3: 1–2**
கடவுள் இருப்பதுபோல் அவரைக் காண்போம்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா, அல்லேலூயா! நல்ல ஆயன் நானே. நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன் என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன, என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 10: 11–18**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நல்லாயனாம் இயேசுவின் அன்பையும் இரக்கத்தையும் பாராமரிப்பையும் தன் மக்களுக்கு உணர்த்திட பணியாற்றும் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவிகள் ஆகிய அனைவரும் எப்பொழுதும் நல்லாயனைப் போல் சிந்திக்கவும், செயல்படவும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்காக எப்பொழுதும் வாஞ்சையுடன் பணியாற்றவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

என் ஆடுகளை நானறிவேன். அவையும் என்னை அறியும்” என்ற இயேசுவின் வார்த்தைகளை சிரமேற் கொண்டு நாட்டு மக்களின் தேவைகளையும் அவசியங்களையும் உணர்ந்தவர்களாக மக்களை வழிநடத்தும் தலைவர்களாக நாட்டின் தலைவர்கள் உருவாகவும் தமது சுயநலன்களை துறந்து பொதுநலனுக்காக பணியாற்றும் நல்ல தலைவர்களாக செயல்படவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நல்லாயன் இயேசுவை நாம் எமது செபத்தின் மூலமும் விவிலியத்தை வாசிப்பதன் மூலமும் அறிந்து கொள்ளவும், அவரிடம் விளங்கும் பண்புகளை நமதாக்கிக் கொண்டு பிறருக்காக பணி புரியவும் நல்ல ஆடு தனது ஆயனைப் பின் செல்வது போல் இயேசுவை முழு மனதோடு பின்பற்றவும் நாம் இயேசுவைப் பிரிந்து சென்றால் நல்வாழ்வை இழந்துவிடுவோம் என்பதை உணர்ந்து கொண்டு வாழ வரமருள வேண்டுமென்று...

**“உன் மனதைப் பொறுத்துத்தான் உன் வாழ்க்கை அமையும்!”**
**“நீ நினைத்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம்!”**
**“நல்லதையே நினை! நீ நன்றாக இருப்பாய்.**
**உன்னைச் சுற்றி இருப்பவர்களும் நன்றாக இருப்பார்கள்!”**
**“உன் மனதைப் புரிந்துகொண்டால் குழப்பம் குறையும்”**
**“மனம் ஒரு குரங்கு. உன் மனதைக் கட்டுப்படுத்தினால் வாழ்க்கை எளிதாக இருக்கும்!”**

நமக்கு முன்சென்ற பெரியவர்கள் தங்களுடைய அனுபவத்தை ஆய்வு செய்து, நம்முடைய வாழ்க்கையும் மகிழ்ச்சியும் நம்முடைய மனதைப் பொறுத்ததுதான் என்றும், மனதைப் புரிந்து, அதைக் கட்டுப்படுத்தத் தெரிந்து கொண்டால் நம் வாழ்க்கை எளிதாகவும், இனிமையானதாகவும் இருக்கும் என்று இரத்தினச் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

நம்முடைய மனதினுடைய சக்தி இருக்கிறதே.. அதைப் புரிந்து கொள்ளும் சக்தி நம்மிடம் இல்லை. அதைப் புரிந்து கொண்டால், நம்முடைய எண்ணங்களுக்கும், உணர்வுகளுக்கும், செயல்களுக்கும் பின்னால் இருக்கக்கூடிய ஏன்? ஏன் என்ற நூற்றுக் கணக்கான கேள்விகளுக்கு ஓரளவாவது பதில்களைத் தெரிந்து கொள்ள முடியுமே! அலையும் மனதை ஒருமுகப் படுத்தக் கற்றுக்கொண்டால் வாழ்வில் எவ்வளவோ சாதிக்கலாமே!

நம்முடைய மனதை நமக்குத் தெரிந்த ஒன்றோடு ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் பசிபிக் கடலுக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். பசிபிக் கடல்தான் இருக்கின்ற கடல்களிலே பெரிய கடல், ஆழமான கடல். அதன் உள்ளே என்னென்ன இருக்கின்றன என்பதை இன்னும் ஆய்வாளர்கள் முழுமையாகக் கண்டுபிடிக்கவில்லை. அவ்வளவு பெரிய, புதிராக இருக்கின்ற கடலைப் போன்றதுதான் நம்முடைய மனது, நாம் பசிபிக் கடலின் கரையோரத்தில் நின்றுகொண்டிருக்கும்போது, யாராவது “உங்களுக்கு இந்தக கடலைப் பற்றித் தெரியுமா?” என்று கேட்டால், எனக்குத் தெரியும் என்று சொல்ல முடியுமா? நான் இருக்கின்ற இடத்தையும் என்னைச் சுற்றி இருக்கிறவைகளையும் பற்றிக் கொஞ்சம் தெரியும். அவ்வளவுதான்! நம்முடைய மனதைப் பற்றிய அறிவும் அதைப் போன்றதுதான்! நம்மைப் பற்றித் தெரிந்தது கையளவு! தெரியாதது உலகளவு!

ஒரே நிகழ்ச்சியில் ஒரு பத்துப் பேர் ஈடுபடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தப்

## மனமே ஓ மனமே

பத்துப் பேருக்கும் ஒரே மாதிரியான எண்ணங்களும் உணர்வுகளும் எதிர்பார்ப்புகளும் இருப்பதில்லை. ஒருவர் “ஆஹா ஓஹோ” என்று ஆனந்தத்தில் துள்ளிக் குதிக்கும்போது, இன்னொருவர் “நேரம் வீணானது தான் மிச்சம்!” என்று எரிச்சலை வெளிப்படுத்தலாம். ஒவ்வொருவருடைய எண்ணங்களும், உணர்வுகளும் ஏன் வித்தியாசமாக இருக்கின்றன என்ற கேள்விக்குப் பதில் ஒவ்வொருவரும் தன்னுடைய மனக்கண்ணால் வித்தியாசமாகப் பார்க்கிறார். ஒருவருடைய அகப்பார்வை இன்னொருவருடையதைப் போன்று இல்லை. ஆகவேதான் ஓர் அழகான பெண்ணைப் பார்த்துத் தனக்குப் பிடிக்கவில்லை என்று ஒருவர் ஒதுக்குகிறபோது “வசியம் செய்யும் உலக அழகி” என்று அதே பெண்ணைப் பார்த்து இன்னொருவர் மயங்குவதுண்டு. “இந்த ஆசிரியர் மிக அருமையாகச் சொல்லித் தருகிறார்” என்று ஒரு சிலர் பாராட்டும்போது வேறு சிலர் “இவர் போரடிக்கிறார்” என்று தூற்றுவதுண்டு. கடின உடற்பயிற்சியும் செய்வதில் நிறைவுகாணும் ஒருவர் இருக்கும்போது, அதே குடும்பத்திலேயே வேறு ஒருவர் எந்தவொரு உடற்பயிற்சியும் இல்லாமல்



நாட்களை ஓட்டுவதை வழக்கமாகக் கொண்டிருப்பவர் உண்டு.

இதனடிப்படையில்தான், ஜான்மில்டன் என்ற புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர், தன்னுடைய இழந்த சொர்க்கம் (Paradise Lost) என்ற காவியத்தில் பேய்களின் தலைவன் லூசிபேர் சொல்வதாக வர்ணிக்கிறார். “மனது இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறது. அது சொர்க்கத்தை நரகமாகவும், நரகத்தை சொர்க்கமாகவும் மாற்ற முடியும்”. ஐம்புலன்கள் வழியாக வரும் செய்திகளை ஆய்வு செய்து..

தொடர்ச்சி 15ம் பக்கம்..




# மன்னார் மறைமாவ...
# ஜோசப் ஆண்ட...



## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தங்களது சகோதர ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு பிரியாவிடை வழங்குகின்றது

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயரான இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவை முன்னிட்டு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை ஆழ்ந்த கவலையை தெரிவித்து கொள்ளுகின்றது.

மேலும் தங்களின் ஆழ்ந்த அனுதாபங்களை மன்னார் ஆயர், குருக்கள் துறவிகள் மற்றும் பொதுநிலையினருக்கு தெரிவித்துக் கொள்கின்றது.

அவர் மன்னார் மறைமாவட்டத்தில் 1991ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை அரும்பணியாற்றினார். அவர் திருஅவைக்கும் நாட்டிற்கும் பல்சமய உரையாடலை ஊக்குவித்ததன் மூலமும் எமது நாட்டில் சகோதரத்துவத்தை வலியுறுத்தியதன் மூலமும் குறிப்பிடத்தக்க வகையில் திருஅவைக்கும் நாட்டிற்கும் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

மறைமாவட்டத்தின் நல்லாயனாக துன்புறும் தமது மக்களின் தேவைகளில் அக்கறையுள்ள ஒருவராக இருந்துள்ளார். ஆகவே அவரை மிக்க நன்றியுடன் நினைவுகூருகின்றோம் அவரை பிரமாணிக்கமுள்ள நல்லாயனாகிய இரக்கம் நிறை இயேசுவின் கரங்களில் நிலைவாழ்வின் பரிசிற்காக கையளிக்கின்றோம்.

**மேதகு ஆயர் ஜே. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, ந.நா.ச,**
**ஆண்டகை தலைவர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை**
**பதுளை மறைமாவட்ட ஆயர்**

**மேதகு ஆயர் ஜே.டி. அந்தனி ஆண்டகை, பொதுச்செயலாளர்**
**இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை, கொழும்பு**
**உயர்மறைமாவட்ட துணை ஆயர்**





# ர்மை தீர்ப்புக்காக

## போராடினோம்...

## போராடுவோம்...

## ட்ட முன்னாள் ஆயர் மேதகு. இராயப்பு கையின் இறுதிச்சடங்கு நிகழ்வுகள்.



# தமிழ்ச் சமூகத்தின்

## உன்னத இரு காவலர்கள் ஒரே நாளில் மறைந்து போயினர்

## மனித உரிமைகளின் காவலன்

## மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர்

## மேதகு. பேரருட்கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகை



இறைபணியில் மட்டுமல்லாது ஏழை எளிய மக்களின் வாழ்விலும் தனது அக்கறையையும், அதீத கரிசனையையும் கொண்ட வழிகாட்டியாக சிறப்புற்று விளங்கிய மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு. இராயப்பு ஜோசப் ஆண்டகை ஆயர் பணியில் 25 வருடங்களை நிறைவு செய்து வெள்ளிக் கண்டு இன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். தமிழ் மக்களின் உரிமைக்காக ஓங்கி ஒலித்த குரல் ஒன்று இன்று அமைதியில் உறங்குகின்றது.

இவர் மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக 1992ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ஆம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டார். ஆயர் 16.04.1940 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நெடுந்தீவில் பிறந்தார். நெடுந்தீவு றோ.க. பாடசாலை, முருங்கன் மகா வித்தியாலயம், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்தார்.

கண்டி தேசிய குருமடம், திருச்சி புனித பவுல் குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வியைக் கற்று 13.12.1967ஆம் ஆண்டு முன்னாள் யாழ். ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையினால் யாழ். மரியன்னை பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1992 ஆம் ஆண்டு ஆடி மாதம் 6ஆம் திகதி முன்னாள் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்றார். 1992ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ஆம் திகதி ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை உட்பட இலங்கையின் ஏனைய ஆயர்கள் புடைசூழ மருதமடு அன்னை ஆலயத்தில் ஆயராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மறைமாவட்டம் மட்டிலான தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றி வந்தார். திருப்பலி, திருவிழாக்கள், பங்குத்தரிசிப்புக்கள், ஆலோசனைகள், கூட்டங்கள், மாநாடுகள், ஆலய மற்றும் பங்குமனைக் கட்டுமானங்கள், ஏழைகளுக்கான உதவிகள் என அவர் தன் கடமைகளை மேற்கொண்டு வந்தார். இவர் மறைமாவட்டத்தைப் பொறுப்பெடுத்தபோது 15 பங்குகள் இருந்தன. இவர் ஓய்வுபெறும்போது 38 பங்குகளாக அவை அதிகரித்திருந்தன.

பம்பைமடுவில் அன்னை திரேசாவின் அருட்சகோதரிகளை வரவழைத்து முதியோர் மற்றும் கைவிடப்பட்டவர்களைப் பராமரிக்க ஒரு இல்லத்தை ஆரம்பித்தார். முருங்கனில் டொன் பொஸ்கோ குருக்களை வரவழைத்து இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்க ஆவன செய்தார். அடம்பனில் இயேசு சபைக் குருக்களை வரவழைத்து அவர்களின் பணி மறைமாவட்டத்திற்கு கிடைக்க வழிசெய்தார்.

இந்தியாவில் இருந்து பல புதிய பெண் துறவற சபைகளை மன்னார் மறைமாவட்டத்திற்கு வரவழைத்து இந்திய அருட்சகோதரிகளின் பணியை மக்கள் பெற வழிவகுத்தார். மடுத்திருப்பதியில் தியான இல்லம் ஒன்றைக் கட்டியெழுப்பி அதன் மூலம் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஏனைய மறைமாவட்டத்தவர்களும் பயன்பெற வழிகோலினார்.

### துன்புற்ற மக்களின் துயர் துடைத்தார்

ஒரு கொடூரமான போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்துநின்ற மக்களின் துயரங்களைத் துடைக்க அவர் அரும்பாடுபட்டார். சிறைகளில் வாடும் கைதிகளை அவர் அடிக்கடி சென்று பார்வையிட்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். அவர்களோடு தனிப்பட்ட தொடர்பாடல்களை வைத்திருந்தார். காணாமலாக்கப்பட்டவர்கள் சார்பாக நின்று அவர்களைக் கண்டுபிடிக்க அல்லது அவர்களின் கதியை வெளிக்கொணர ஓயாது உழைத்தார்.

யுத்தத்தால் தமது இல்லிடங்களை இழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டார். முள்ளிக்குளத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும், விடத்தல்தீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் அவர் காணிகளை, வீடுகளை வழங்கியமை இதற்கு உதாரணமாகும்.

யுத்தத்தால் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டவர்களுக்கு வாழ்வோதய நிறுவனத்தின் உதவிக்கரம் பிரிவு மூலம் உதவிகளைப் புரிந்தார். வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள வரோட் நிறுவனத்தின் ஊடாகவும் இவர்களின் புனர்வாழ்வுக்காகப் பாடுபட்டார். யுத்தத்தாலும், சுனாமியினாலும் பெற்றோரை இழந்து ஆதரவற்று நின்ற பெண் சிறார்களுக்கு வவுனியாவில் சலேசிய அருட்சகோதரிகளின் பராமரிப்பில் இல்லத்தை ஆரம்பித்தார். அதேபோல் மன்னாரிலும் ஆண் சிறார்களுக்கான ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். இவ்வாறு இன்னும் பல துயர்துடைப்புப் பணிகளை முன்னெடுத்தார்.

### கண்டனங்களுக்கு ஆயரின் விளக்கம்

2012ஆம் ஆண்டு லக்பிம என்ற சிங்களப் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் தன்னைப்பற்றிய பல விமர்சனங்களுக்கு அவர் பதில் அளித்திருந்தார். நீங்கள் சர்ச்சைக்குரிய ஆயர் என அழைக்கப்படுகின்றீர்கள். இதுபற்றிய உங்கள் விளக்கம் என்ன? என்ற கேள்விக்கு அவருடைய பதில், நான் சர்ச்சைக்குரிய ஆயர் என அழைக்கப்படுகின்றேன். ஏனென்றால் சர்ச்சைக்குரிய விடயங்கள் நடைபெறுகின்றன. நான் அந்த விடயங்கள் பற்றிப் பேசும்போது சர்ச்சைக்குரிய ஆளாக மாறுகின்றேன்.

நான் உண்மையைப் பேசுவதால் வெளிப்படையாகப் பேசும் ஆயர் என்கின்றனர். நான் ஏழைகள் மேல் கரிசனை கொண்டு நீதிக்காகக் குரல் கொடுத்தால் நான் இலங்கைக்கு எதிரானவன், புலிகள் அல்லது பிரிவினைவாதி என்கின்றனர். இப்பெயர்களைப்பற்றி நான் அலட்டிக்கொள்வது இல்லை. நான் தொடர்ந்தும் அநீ-



திக்கு எதிராகக் குரல் எழுப்புவேன். மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுவேன்.

நீங்கள் விடுதலைப் புலியா? அல்லது அந்த அமைப்பின் தீவிர ஆதரவாளரா? என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில், நான் ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறேன் என்பது எனக்குத் தெரியாது. என்னை அப்படி அழைப்பது அவர்களின் பலவீனம். நான் விடுதலைப் புலிகளின் கொலைகளையும், அட்டூழியங்களையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அவர்களுடைய கொலைகளைக் கண்டித்திருக்கிறேன்.

இதனால் கொலை மிரட்டல்களையும் பெற்றிருக்கிறேன். நான் ஒருபோதும் தனிநாட்டை விரும்பவில்லை. எனது கனவில்கூட விரும்பவில்லை. ஒரு குரு என்ற வகையில், உண்மையையும், வாழ்வையும், வழியையும் வெளிப்படுத்தி வன்முறைக்குப் பலியான இயேசுவை பின்பற்றுகிறவன் என்ற வகையில் நான் எனது கடமைகளைச் செய்கின்றேன் என்றார்.

### பணி ஓய்வு

1992ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அவர் சுகவீனமடையும்வரை இடைவிடாமல் தொடர்ச்சியாக இயங்கி வந்தார். திருச்சபையின் ஒழுங்கு விதிக்கு அமைய 75 வயது நிறைவில் தான் பணியிலிருந்து ஓய்வு பெறுவதாக திருச்சபைச் சட்ட எண் 401 பகுதி 1இற்கு அமைவாக பாப்பரசர் பிரான்சிஸிஸ் அறிவித்தார். 2016ஆம் ஆண்டு தை மாதம் 14ஆம் திகதி இவருடைய பணி ஓய்வுக்கான கோரிக்கையை பாப்பரசர் ஏற்றுக்கொண்டார்.


2014ஆம் ஆண்டு மன்னார் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் நிறைவுநாள் நிகழ்வின்போது மன்னார் தமிழ்ச் சங்கம் "இனமான ஏந்தல்" என்ற விருதை இவருக்கு வழங்கிக் கௌரவித்தது. 2015ஆம் ஆண்டு கொழும்புக் கம்பன் கழகம் இவருக்கு "கம்பன் புகழ்" விருதினை வழங்கிக் கௌரவித்தது.

குறிப்பாக ஈழத்துத் திருச்சபையின் பணியாளர்கள் ஆயரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற விளைய வேண்டும்.காலத்தின் தேவைக்கு ஏற்ப துணிவோடு, உறுதியோடு செயலாற்ற வேண்டும். ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் வாழ்வும் பணிகளும் இன்றைய, நாளைய தலத்திருச்சபைக்கு சவாலாக, விழிப்புணர்வாக, உந்துதலாக அமைய வேண்டும்.



# கலைகளின் காவலன் சிம்மக் குரலோன் திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனர் தந்தை "கலைத்தூது" அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளார்

ஆக்கம். அருட்சகோ. R. ஜோசப் ஜெயகாந்தன்.



இறைவன் நல் உள்ளம் கொண்டவர்களை அதிக காலம் வாழ வைப்பதில்லை. தன்னிடத்தில் அழைத்துக் கொள்வார். அவ்வரிசையில் எப்படி நாம் வாழ வேண்டும் என்பதை தன் அன்பான கருணையான பேச்சால், பார்வையால் மக்கள் இதயங்களில் இடம்பிடித்தவர், தமிழர்கள் பரந்துவாழும் இவ்வுலகில் இவரைத் தெரியாதவர்கள் இல்லை என்றே கூறலாம். மறைவழி இறைப்பணியாற்றும் இறைபணியாளர்களை நாம் காணலாம். ஆனால் கலைவழி இறைபணியாற்றும் இறைபணியாளர் சொற்பப் பேரே அவர்களில் ஒருவராக எம் அருட்தந்தை திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.

ஈழத்தின் கலை இலக்கியப் புலத்திலும் அர்ப்பணிப்புள்ள சமூகப்பணிகளிலும் கலை இலக்கியப் பாரம்பரியத்திலும் தனது பணிகளினாலும் கலை ஆளுமையினாலும் முதன்மைப்படுத்தப்பட்ட அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள். தனது 81ஆவது வயதில் இவ்வுலகை நீத்தார்.

கடந்த ஆறு தசாப்தகாலமாக கலை இலக்கியத் துறைகளோடும் சமுகப்பணிகளோடும் தன்னைக்-கரைத்துக் கொண்டவர் இனம் மதம் மொழிகடந்து "மனிதம்" என்ற உயரிய சிந்தைனையை வாழ்வாக்கிக் கொண்டவர் திருமறைக் கலாமன்றம் என்ற கலாசார நிறுவனத்தினை உருவாக்கி அதனூடாக இறுதிவரையும் நாடுதழுவியும் நாடுகடந்தும் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அம்மன்றத்தினூடாக உருவாக்கம் பெற்ற பல படைப்பாளிகள் இன்று உலகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.


ஈழத்திலே யுத்தம் கொழுந்துவிட்டெரிந்த காலத்தில் தனித்து நின்று கலைசெய்து கலையினூடாக தமிழ் இனத்தின் துயரங்களை உலகறிய செய்ததுடன், துயருற்ற மக்களுக்கான கலைவழி ஆற்றுப்படுத்தலையும் செய்தவர். இத்தகைய சிறப்புக்குரிய கலைக்குருவாகிய மரிசேவியர் அடிகள் கடந்த முதலாம் திகதி இறைவனடி சேர்ந்தார். 06.04.2021 செவ்வாய்க்கிழமை அவரது இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.

மரியசேவியர் அடிகள் 03.12.1939 அன்று இளவாலையில் பிறந்தார். கலைப்பூமியாகிய இளவாலையில் பாலப்பருவத்தில் இருந்தே கூத்துக்களில் நடித்தது மட்டுமன்றி கோவில் பாடகர் குழாமில் பாடல்களைப் பாடுதல், பாடசாலையில் நாடகங்கள் நடித்தல் என தனது கலை ஆர்வத்தினை வளர்த்துக்கொண்டவர்.

1963ஆம் ஆண்டில் இருந்தே கலைச் செயற்பாடுகளை ஆற்றத் தொடங்கிய மரியசேவியர் அடிகள் திருமறைக்கலாமன்றம் என்னும் அமைப்பினை 1965 ஆண்டு ஆரம்பித்து இன்று வரைக்கும் அதன் இயக்குனராக இருந்து பணியாற்றிக் கொண்டிருப்பவர். ஆரம்பத்தில் தனியே திருப்பாடுகளின் காட்சிகளையும் நாடகங்களையும் மட்டும் நிகழ்த்தும் நிறுவனமாக உருவாக்கி 1988ஆம் ஆண்டில் இருந்து இன மத மொழி கடந்தியங்கும் கலாசார மையமாக பல்வேறுபட்ட பணிகளைகளையும் ஆற்றிவரும் நிறுவனமாக இதனை வளர்த்தெடுத்தார்.

தொண்ணூறுகளில் யுத்தம் முனைப்புபெற்ற காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினையை தென்பகுதியில் யாரும் பேசமுடியாத காலத்தில் "கலை" என்ற தளத்தில் எல்லா மனிதர்களையும் சந்திக்கச் செய்யமுடியும் என்ற கொள்கையுடன் சமாதானத்துக்கான பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டார். யுத்தத்தின் பயங்கரத்தினை வெளிப்படுத்தவும் சமாதானத்தின் அவசியத்தினை வலியுறுத்தவும் தலைநகரில் "வார்த்தைகளற்ற நாடகம்" என்ற வகைமையை உருவாக்கி. பல நாடகங்களை மேடையேற்றினார். "புறம்" "அசோகா", "தர்ஷனா" "கி.மு.200"... போன்ற அவரது நாடகங்கள் தலைநகரில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. "ஊமம்" முறைமையில் மரியசேவியர் அடிகளினால் பரீட்சார்த்தமாக உருவாக்கப்பட்ட அவ் வடிவம் எந்த மொழி பேசுபவராலும் புரிந்து கொள்ளக்கூடிய, இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வடிவமாக அமைந்தது. புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழுகின்ற எம்மவர்களை இணைத்து அங்கு கிளைகளை உருவாக்கியதுடன், திருமறைக்கலாமன்றத்தின் பணிகளை அங்கும் ஆற்றிவருவதுடன் எம்மவர்களை சந்தித்து மண்ணின் உறவுகளையும் கலாசார வேர்களையும் புத்துயிர்ப்பு செய்யும் வகையிலான பல்வேறு கலாசாரக் கலைப்பயணங்களை அசாத்திமான காலச் சூழல்களி-லெல்லாம் பகீரத பிரயத்தனங்களின் மத்தியில் மேற்-கொண்டு இங்கிருந்த எமது கலைஞர்களுக்கான சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தி இதுவரை 19 தடவைகள் வெளிநாட்டுக் கலைப்பயணங்களை மேற்கொண்டார். இவரது கலைத்தூதுப் பயணங்களை மதித்து யேர்மன் ஆன்மீகப் பணியகம் இவருக்கு 1998ஆம் ஆண்டு "கலைத்தூது" என்ற பட்டத்தினை வழங்கி கௌரவித்தது.





சிறிய வயதில் இருந்தே கல்வியில் சிறந்து விளங்கிய இவர் இரட்டை வகுப்பேற்றங்களினால் குறைந்த வயதிலேயே தனது குருத்துவக்கல்வியை முடித்து, 22 வயதில் பாப்பரசரின் விசேட அனுமதியுடன் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு மட்டுமன்றி உரோமைப் பல்கலைக்கழகத்தில் இறையியலில் கலைமாணி, முதுதத்துவமாணி கற்கைகளை தனது இளவயதிலேயே நிறைவு செய்தார். பின்னர், தமிழகத்தில் மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் தமிழை சிறப்பு பாடமாக பயின்று "வித்துவான் புலவர்" பட்டங்களைப் பெற்றார்.

நாடகம்பற்றி தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளார். இவற்றைவிட திருமறைக் கலாமன்றத்தினூடாக "கலைமுகம்" என்னும் கலை இலக்கிய இதழினை 1990ஆம் ஆண்டுமுதல் பிரதான ஆசிரியராக இருந்து நடத்தி வந்திருந்தார்.

# கலைத்தீபம் ஏற்றிய ஞானக் கலைஞன் மரிய சேவியர் அடிகளார்

கடவுள் மகன்
கண்டெடுத்த பணியாளன்,
கடமை தவறா
கண்ணியம் நிறை
தமிழ்ப் பற்றாளன்,
கலைவழியில்
கடவுளைப் புகழ
கலைத் தீபம் ஏற்றிய
ஞானக் கலைஞன்..
எங்கே எங்கே????..
தேடுகின்றோம்...
கலங்குகின்றோம்..

தந்தையே!
நீங்கள் ஏற்றிய
கலைத் தீபம்
திக்கெட்டும் ஒளிர்கிறதே..
அது
அணையாதொளிர்ந்திட
எண்ணெயாக நீங்கள்
இருந்தீர்களே...
எண்ணெய்
குறைந்திடுமா?
எம்
எண்ணங்கள்
அணைந்திடுமா?

ஆயன் மந்தையைக்
கைவிடுவானோ...
தேடுவான் நாடுவான்..
நல் நீர்நிலைக்கு
அழைத்துச் செல்வான்..
நீங்களும் எம்மைக்
கைவிட மாட்டீர்,
உங்கள் உடல் தான்
மடிந்தது..
உங்கள் உயிரும்
உணர்வும்
எம்மோடு கலந்திருந்து..
எம்மை ஒளிர்விக்கும்
என
உறுதியாக நம்புகிறோம்..

தமிழ்ப் புலவரே!
இலங்கையர் போற்றிய
மகாகலைஞனே..
உம்மால் உருவான
கலைஞர் பலரில்..
உமது திறனைக்
கண்டோம்..
வயது முதிர்ந்து
சென்றாலும்
உங்கள் பிரிவு எமக்குப்
பேரிழப்பே.

கொள்ளை நோய்
நீங்கும்..
எல்லோரும்
ஒருநாள் சந்திப்போம்
என்றிருந்தோம்..
எல்லாம் கனவாகிப்
போனதே..

கலைச்சுடரே!
கடவுள் அருகில்
சென்றீரோ..
அவர் முன்னே
பிரகாசித்து..
அவரை மகிழ்வித்து..
ஆனந்தம்
கொள்ளுங்கள்..

நீங்கள் செய்த
அனைத்திற்கும் நன்றி
கூறி,
கண்ணீரைக் காணிக்கை
செய்கிறோம்..
இறைவன் கரங்களில்
இளைப்பாறுங்கள்..

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தவர்களுக்காக மனோத்தத்துவ ரீதியானதும் ஆன்மீகத்தை ஊட்டம் பெறவைப்பதுமான நிகழ்ச்சித்திட்டம்.

2019ம் ஆண்டு சித்திரை 21ம் நாள் உயிர்த்த ஞாயிறன்று கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் கட்டுவப்பிடிய புனித செபஸ்த்தியார் ஆலயம் பெரும் பாதிப்பிற்குள்ளானது. எண்ணற்ற மக்கள் மரணித்ததோடு பெரும்பாலான மக்கள் மிகுந்த பாதிப்புக்களை உடல் மற்றும் மன ரீதியாக பாதிக்கப்பட்டனர். இவ்வகையான பாதிப்புக்களில் இருந்து தம் மக்களை மீட்கும் பொருட்டு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையாலும், உயர்-மறைமாவட்ட துணை ஆயர்களான மேதகு. கலாநிதி. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை மற்றும் மேதகு. கலாநிதி. ஜே.டி. அந்தனி ஐயகொடி ஆண்டகையின் ஆலோசனையிலும் அருட்தந்தையர்தளைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

1. மேதகு. ஆயர். கலாநிதி. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை
2. மேதகு. ஆயர். கலாநிதி. ஜே.டி. அந்தனி ஐயகொடி ஆண்டகை
3. அருட்தந்தை. ஜீட் சமந்த பெர்ணான்டோ.
4. அருட்தந்தை. பிரிலி முத்துக்குடாரச்சி
5. அருட்தந்தை. கிஹான் ரிட்லி
6. அருட்தந்தை. க்ளோட் நோனிஸ்
7. அருட்தந்தை. பிரசாத் ஹர்ஷன
8. அருட்தந்தை. லோரன்ஸ் ராமநாயக்க
9. திரு. மேரியஸ் மதுராவல

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று 6 மாத காலத்தினை பூர்த்தி செய்வதுடன் இதுவரைக்காலமும் இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்த தேவையான விதத்தில் பங்காற்றியுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீளாய்வு செய்ததின் மூலம் குடும்பங்களின் தேவைகளை இனங்கண்டு நிவாரண திட்டமானது 03 பகுதிகளாக பிரிக்கப்பட்டு 03 குழுக்கள் அமைக்கப்பட்டது.

1. ஆன்மீக நல சேவை
2. மனோதத்துவ அல்லது மனநல ஆலோசனைச்சேவை
3. சமூக நலச்சேவை

### 1. ஆன்மீக நல சேவை

அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் ஆலோசனைக்கமைய அருட்தந்தை. பிரசாத் ஹர்ஷன அவர்களுடைய தலைமைத்துவத்துடன் கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் விசுவாச வழிக்-காட்டல் குழுவானது (Faith Animation) தமது செயற்திட்ட முன்வரைபுகளை திட்டமிட்டு ஆன்மிக வழியில் வளர்ச்சி பெற வைப்பதற்கான நிகழ்ச்சிகளை வழிநடத்துகின்றனர். இதன் மிக முக்கிய நிகழ்வாக விசுவாச வழிக்காட்டல் குழு செத் சரண நிறுவனத்துடன் இணைந்து தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களை மன்னார் மருதமடு அன்னையின் தேவாலயத்திற்கு கொச்சிக்கடை மற்றும் கட்டுவப்பிடிய மக்களை யாத்திரையாக அழைத்துச்சென்றனர். இதன் முக்கிய அங்கமாக மன்னார் தோட்டவெளி மறைசாட்சிகளின் தேவாலயத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டமையாகும். 600க்கும் மேற்பட்ட இறைமக்கள் இறைவிசுவாசத்தின் நிமித்தம் தமது உயிரை தியாகம் செய்த இவ்வாலயத்தில் தமது உறவுகளைக் கண்டடைந்ததாக பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துப்பகிர்ந்தனர். தற்போது மேலதிக செயற்-பாடுகள் ஒழுங்குற நடைபெற்று வருகின்றது.

### 2. மனோதத்துவ அல்லது மனநல ஆலோசனைச் சேவை

தமது உறவுகளை இழந்து "வாழ்வாதாரத்தை இழந்து" பாரிய காயங்களுக்குள்ளானவர்களின் தவிப்பி-னால் நொறுங்குண்ட இதயங்களை குணமாக்க பேராயர் கர்தினால் ஆண்டகையின் ஆலோசனைக்கிணங்க அருட்தந்தை. க்ளோட் நோனிஸ் தலைமையிலான தொழில் முறை மனநல ஆலோசகர்கள் (Professional Counselors) மற்றும் வைத்தியர்கள் கொண்ட குழுவுடன் மன நல ஆலோசனைச்சேவை வழங்கப்படுகின்றது. வீடு தரிசிப்பு மற்றும் பாதிப்பின் அதிர்ச்சியினால் மனநலமற்றவர்களை சந்தித்தல் போன்ற சேவைகள் செய்யப்படுகின்றது. இரவுப்பகல் பாராமல் இவர்கள் செய்த சேவை அளப்பறியது. இவர்களுடன் 80 க்கும் அதிகமான மனநல ஆலோசகர்கள் மற்றும் வைத்தியர்களுடன் இணைந்து கட்டுவப்பிடிய வலய பங்குகளுக்கு தேவையான நிகழ்ச்சிகளை மேற்கொண்டனர். இவை பிள்ளைகள், இளைஞர்கள், பெற்றோர் மற்றும் முதியவருக்கானவையாக இருந்தது. "எம்மாவுஸ்" மனநல ஆலோசனை நிலையத்தினை கட்டுவபிட்டியில் ஸ்தாபித்து மக்களுக்கான சேவையை செய்கின்றது. மேலும் செத் அலைவரிசையின் ஊடாக ஒரு மணித்தியாலத்திற்கான மனநல ஆலோசனை நிகழ்ச்சி ஒளிப்பரப்பாகின்றது.

### 3. சமூக நலச்சேவை

முதல் இரண்டு தேவைகளும் பாதிக்கப்பட்ட மக்களின் உள்ளார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக அமைந்தது. இது மிகவும் சவாலான செயற்பாடாக அமைந்தது. சமூக நலச்சேவையின் பொருட்டு மக்களின் வெளிவாரியான தேவைகளைப் பூர்த்தி செய்வதன் நோக்கமாக காணப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்களின் தேவைகள் 05 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

1. மருத்துவத் தேவைகள்
2. வாழ்வாதாரம்
3. வருமானம் ஏற்படுத்தல்
4. கல்வி மற்றும் உதவித்தொகை
5. வீடமைப்புத்திட்டம்

பேராயர் கர்தினால் ஆண்டகையின் ஆலோசனை-க்கமைய அருட்தந்தை. லோரன்ஸ் ராமநாயக்க அடிகளாரின் தலைமையில் செத் சரண நிறுவனம் இவ் வேலைத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

#### 1. மருத்துவத் தேவைகள்

காயப்பட்ட குடும்பங்கள் 399 ஆகும். அதிக ஆபத்தான காயங்களுடையவர்களாக 10 பேர் காணப்படுகின்றனர். இவர்களுக்காக பாரிய அளவு பணத்தொகை செலவிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட-வர்களால் செலவிடப்பட்ட பணம் மீள அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

#### 2. வாழ்வாதாரம்

மேற்குறிப்பிட்ட தாக்குதலினால் பாதிப்படைந்த குடும்பங்கள் தங்களின் பராமரிப்பாளர்கள் பாதிக்கப்பட்டனர் மற்றும் சிலர் இறந்தனர். அவ்வாறன குடும்பங்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்வதுடன் நாளாந்த தேவைகளை அறிந்து செயற்படு-கின்றது.

#### 3. வருமானம் ஏற்படுத்தல்

பாதிக்கப்பட்ட 285 - 119 குடும்பங்களில் மீளாய்வு செய்யப்பட்டதில் கட்டுவபிட்டியில் 64 குடும்பங்களுக்கும் "கொச்சிக்கடையில் 46 குடும்பங்களுக்கும் நேரடி உதவி தேவைப்படுவதாக கண்டறியப்பட்டது. இதன் மூலம் குடும்பங்களின் பிரதான பராமரிப்பாளர்கள் பாதிக்கப்-பட்டிருந்ததை அடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக வருவாய் ஏற்படுத்தும் வழிமுறைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றது".

#### 4. கல்வி மற்றும் உதவித்தொகை

பேராயர் கர்தினால் ஆண்டகையின் ஆலோசனை-க்கமைய ஏற்படுத்தப்பட்ட விசேட குழுவினரின் வழிக்காட்டலுக்கமைய பாதிக்கப்பட்ட குடும்பங்களில் காணப்படும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட இருக்கின்றது. எனவே 325 பிள்ளைகளுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் ஆரம்ப வைபவம் மார்கழி மாதம் 1ம் நாள் நடைப்பெறவிருக்கின்றது. கொச்சிக்கடை, கட்டுவப்பிட்டிய பிள்ளைகள் அனைவரும் உள்ளடக்கப்படுகின்றனர்.

#### 5. வீடமைப்புத்திட்டம்

பாதிக்கப்பட்டவர்களில் வாடகை வீட்டில் வசிப்போரை சொந்த வீடுகளில் அமர்த்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பொருட்டு கட்டுவப்பிட்டியில் வாழும் 25 குடும்பங்க-ளுக்கான காணி கொள்வனவு செய்யப்பட்டு வீடுகள் அமைப்பதற்கான ஒத்துழைப்பு வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படுகின்றது. மேலும் கொச்சிக்கடை பகுதியில் பாதிக்கப்பட்டு வாடகை வீட்டில் வசிப்போரு-க்கான காணிகள் கொள்வனவு செய்ய இயலாமை இருப்பதனால் அவர்ளை அடுக்கு மாடி வீடுகளில் குடியமர்த்த அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படகின்றது.

கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் 6 மாதகாலமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பகிரப்பட்ட நிதித் தொடர்பான தகவல்களாகும். பேராயர் கர்தினால் ஆண்டகையின் நன்கொடையானது இவ்வாறாகப் வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| காணி கொள்வனவு | 53,000,000.00 |
| கல்வி உதவித்தொகை 325 | 102,000,000.00 |
| மனநல ஆலோசனையின் மொத்த செலவு | 3,568,500.00 |
| விசுவாச வழிக்காட்டலின் மொத்த செலவு | 4,829,688.82 |
| சமூக நலச்சேவை (Distribution of cash grants for 399 families) | 131,546,325.49 |
| பிற செலவீனம் | 1,231,478.21<br>**296,175,992.52** |
| கர்தினால் நன்கொடை | 386,705,000.00 |
| மிகுதி (For Medical and Income Generation) | **90,529,007.48** |

பாதிக்கப்பட்ட குடும்பங்களை பதிவு செய்வதற்கு பிரத்தியேகமான பதிவு இலக்கத்ததை வழங்கியுள்ளோம். கொச்சிகடை மக்களுக்கு KO எனும் ஆங்கில எழுத்துடன் கூடிய இலக்கங்களும் (KO 000) கட்டுவப்பிட்டிய மக்களுக்கு (KA 000) என்பதன் முறையே பதிவு மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. தகவல்களின் நம்பகத்தன்மையை பாதுகாப்தற்கும், தனிநபரின் சுயமரியாதையின் நிமித்தமும் இவ்வாறு பதிவு மேற்கொள்ளப்பட்டது.

**அருட்தந்தை.லோரன்ஸ் ராமநாயக்க.**
**இயக்குனர்.**
**செத் சரண கரித்தாஸ் கொழும்பு.**

## கொச்சிக்கடையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நன்கொடை

| Reg . No | Amount | KO 23 | 300,000.00 | KO 46 | 228,788.00 | KO 69 | 210,000.00 | KO 92 | 250,000.00 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| KO 01 | 340,000.00 | KO 24 | 350,000.00 | KO47 | 400,000.00 | KO 70 | 325,000.00 | KO 93 | 200,000.00 |
| KO 02 | 310,000.00 | KO 25 | 400,000.00 | KO 48 | 225,000.00 | KO 71 | 175,000.00 | KO 94 | 360,000.00 |
| KO 03 | 675,000.00 | KO 26 | 400,000.00 | KO 49 | 525,000.00 | KO 72 | 851,186.57 | KO 95 | 180,000.00 |
| KO 04 | 512,483.00 | KO 27 | 618,094.00 | KO 50 | 325,000.00 | KO 73 | 275,000.00 | KO 96 | 225,000.00 |
| KO 05 | 435,000.00 | KO 28 | 500,000.00 | KO 51 | 300,000.00 | KO 74 | 205,000.00 | KO 97 | 1,200,000.00 |
| KO 06 | 1,537,551.37 | KO 29 | 510,000.00 | KO 52 | 360,000.00 | KO 75 | 425,000.00 | KO 98 | 300,000.00 |
| KO 07 | 285,000.00 | KO 30 | 509,962.50 | KO 53 | 350,000.00 | KO 76 | 250,000.00 | KO 99 | 200,000.00 |
| KO 08 | 400,000.00 | KO 31 | 450,000.00 | KO 54 | 380,000.00 | KO 77 | 325,000.00 | KO 100 | 200,000.00 |
| KO 09 | 450,000.00 | KO 32 | 430,000.00 | KO 55 | 490,000.00 | KO 78 | 325,000.00 | KO 101 | 410,052.13 |
| KO 10 | 425,000.00 | KO 33 | 575,000.00 | KO 56 | 275,000.00 | KO 79 | 210,000.00 | KO 102 | 80,000.00 |
| KO 11 | 463,094.00 | KO 34 | 450,000.00 | KO 57 | 200,000.00 | KO 80 | 200,000.00 | KO 103 | 300,000.00 |
| KO 12 | 450,000.00 | KO 35 | 490,000.00 | KO 58 | 100,000.00 | KO 81 | 330,000.00 | KO 104 | 50,000.00 |
| KO 13 | 295,000.00 | KO 36 | 450,000.00 | KO 59 | 285,000.00 | KO 82 | 200,000.00 | KO 105 | 100,000.00 |
| KO 14 | 425,000.00 | KO 37 | 504,996.50 | KO 60 | 300,000.00 | KO 83 | 180,000.00 | KO 106 | 200,000.00 |
| KO 15 | 425,000.00 | KO 38 | 440,000.00 | KO 61 | 600,000.00 | KO 84 | 110,000.00 | KO 107 | 100,000.00 |
| KO 16 | 375,000.00 | KO 39 | 300,000.00 | KO 62 | 1,105,683.25 | KO 85 | 175,000.00 | KO 109 | 100,000.00 |
| KO 17 | 275,000.00 | KO 40 | 295,000.00 | KO 63 | 485,000.00 | KO 86 | 225,000.00 | KO 110 | 200,000.00 |
| KO 18 | 458,775.00 | KO 41 | 100,000.00 | KO 64 | 325,000.00 | KO 87 | 60,000.00 | KO 113 | 50,000.00 |
| KO 19 | 450,000.00 | KO 42 | 720,000.00 | KO 65 | 325,000.00 | KO 88 | 400,000.00 | KO 114 | 50,000.00 |
| KO 20 | 239,397.81 | KO 43 | 775,714.84 | KO 66 | 380,340.00 | KO 89 | 270,000.00 | | |
| KO 21 | 425,000.00 | KO 44 | 250,000.00 | KO 67 | 260,000.00 | KO 90 | 250,000.00 | | |
| KO 22 | 450,000.00 | KO 45 | 475,000.00 | KO 68 | 245,000.00 | KO 91 | 250,000.00 | | |

**39,846,118.97**
**100,000.00**
**(39,846,118.97)**

# கட்டுவாப்பிட்டியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நன்கொடை

| Ref. No | Total |
|---|---|
| KA 1 | 200,000.00 |
| KA 2 | 300,000.00 |
| KA 3 | 152,500.00 |
| KA 4 | 200,000.00 |
| KA 5 | 1,650,000.00 |
| KA 6 | 400,000.00 |
| KA 7 | 280,000.00 |
| KA 8 | 330,000.00 |
| KA 9 | 360,000.00 |
| KA 10 | 350,000.00 |
| KA 11 | 275,000.00 |
| KA 12 | 310,000.00 |
| KA 13 | 481,000.00 |
| KA 14 | 350,000.00 |
| KA 15 | 535,000.00 |
| KA 16 | 425,000.00 |
| KA 17 | 776,750.00 |
| KA 18 | 800,000.00 |
| KA 19 | 250,000.00 |
| KA 20 | 460,000.00 |
| KA 21 | 560,000.00 |
| KA 22 | 200,000.00 |
| KA 23 | 300,000.00 |
| KA 24 | 350,000.00 |
| KA 25 | 539,198.29 |
| KA 26 | 550,000.00 |
| KA 27 | 1,900,000.00 |
| KA 28 | 250,000.00 |
| KA 29 | 450,000.00 |
| KA 30 | 275,000.00 |
| KA 31 | 350,000.00 |
| KA 32 | 365,000.00 |
| KA 33 | 250,000.00 |
| KA 34 | 300,000.00 |
| KA 35 | 100,000.00 |
| KA 36 | 250,000.00 |
| KA 37 | 650,000.00 |
| KA 38 | 3,485,420.00 |
| KA 39 | 2,299,703.00 |
| KA 40 | 320,000.00 |
| KA 41 | 340,000.00 |

| | |
|---|---|
| KA 42 | 480,000.00 |
| KA 43 | 2,616,335.61 |
| KA 44 | 310,000.00 |
| KA 45 | 250,000.00 |
| KA 46 | 100,000.00 |
| KA 47 | 480,000.00 |
| KA 48 | 380,000.00 |
| KA 49 | 425,000.00 |
| KA 50 | 440,000.00 |
| KA 51 | 600,000.00 |
| KA 52 | 200,000.00 |
| KA 53 | 420,000.00 |
| KA 54 | 370,000.00 |
| KA 55 | 325,000.00 |
| KA 56 | 200,000.00 |
| KA 57 | 687,000.00 |
| KA 58 | 320,625.90 |
| KA 60 | 275,000.00 |
| KA 61 | 200,000.00 |
| KA 62 | 229,900.00 |
| KA 63 | 220,000.00 |
| KA 64 | 1,465,000.00 |
| KA 65 | 358,265.08 |
| KA 66 | 210,000.00 |
| KA 69 | 160,000.00 |
| KA 70 | 75,000.00 |
| KA 71 | 500,000.00 |
| KA 72 | 150,000.00 |
| KA 73 | 146,750.00 |
| KA 74 | 150,000.00 |
| KA 75 | 225,000.00 |
| KA 76 | 400,000.00 |
| KA 77 | 310,000.00 |
| KA 78 | 300,000.00 |
| KA 79 | 209,661.64 |
| KA 80 | 200,000.00 |
| KA 81 | 250,000.00 |
| KA 82 | 200,000.00 |
| KA 84 | 912,495.78 |
| KA 85 | 350,000.00 |
| KA 86 | 218,550.00 |
| KA 87 | 325,000.00 |

| | |
|---|---|
| KA 88 | 386,750.00 |
| KA 89 | 200,000.00 |
| KA 90 | 150,000.00 |
| KA 91 | 350,000.00 |
| KA 92 | 150,000.00 |
| KA 93 | 160,000.00 |
| KA 94 | 273,000.00 |
| KA 96 | 215,000.00 |
| KA 97 | 260,000.00 |
| KA 98 | 390,000.00 |
| KA 99 | 200,000.00 |
| KA 102 | 60,000.00 |
| KA 104 | 515,000.00 |
| KA 105 | 241,000.00 |
| KA 106 | 275,000.00 |
| KA 107 | 250,000.00 |
| KA 108 | 150,000.00 |
| KA 109 | 190,000.00 |
| KA 110 | 475,000.00 |
| KA 111 | 430,000.00 |
| KA 112 | 385,000.00 |
| KA 113 | 325,000.00 |
| KA 114 | 375,000.00 |
| KA 115 | 300,000.00 |
| KA 116 | 350,000.00 |
| KA 117 | 204,961.60 |
| KA 118 | 325,650.00 |
| KA 119 | 590,000.00 |
| KA 120 | 170,000.00 |
| KA 122 | 415,000.00 |
| KA 123 | 587,416.00 |
| KA 124 | 410,197.29 |
| KA 125 | 265,000.00 |
| KA 126 | 695,000.00 |
| KA 127 | 221,750.00 |
| KA 129 | 50,000.00 |
| KA 130 | 190,000.00 |
| KA 131 | 520,000.00 |
| KA 132 | 485,000.00 |
| KA 134 | 310,000.00 |
| KA 135 | 360,000.00 |
| KA 136 | 180,000.00 |

| | |
|---|---|
| KA 137 | 310,000.00 |
| KA 138 | 200,000.00 |
| KA 139 | 180,000.00 |
| KA 140 | 250,000.00 |
| KA 141 | 100,000.00 |
| KA 142 | 150,000.00 |
| KA 143 | 140,000.00 |
| KA 144 | 140,000.00 |
| KA 145 | 140,000.00 |
| KA 146 | 210,000.00 |
| KA 147 | 210,000.00 |
| KA 148 | 200,000.00 |
| KA 149 | 240,000.00 |
| KA 150 | 470,000.00 |
| KA 151 | 200,000.00 |
| KA 152 | 260,000.00 |
| KA 153 | 310,000.00 |
| KA 154 | 410,000.00 |
| KA 155 | 260,000.00 |
| KA 156 | 275,000.00 |
| KA 157 | 565,000.00 |
| KA 158 | 200,000.00 |
| KA 159 | 1,503,146.00 |
| KA 161 | 190,000.00 |
| KA 162 | 450,000.00 |
| KA 163 | 140,000.00 |
| KA 164 | 260,000.00 |
| KA 165 | 340,000.00 |
| KA 166 | 387,693.98 |
| KA 167 | 350,000.00 |
| KA 168 | 360,000.00 |
| KA 169 | 1,058,000.00 |
| KA 170 | 365,000.00 |
| KA 171 | 310,000.00 |
| KA 172 | 450,000.00 |
| KA 173 | 250,000.00 |
| KA 174 | 370,000.00 |
| KA 175 | 260,000.00 |
| KA 176 | 500,000.00 |
| KA 177 | 325,000.00 |
| KA 178 | 310,000.00 |
| KA 179 | 450,000.00 |
| KA 180 | 400,000.00 |
| KA 181 | 460,000.00 |
| KA 182 | 450,000.00 |

| | |
|---|---|
| KA 183 | 590,000.00 |
| KA 184 | 305,320.00 |
| KA 185 | 300,000.00 |
| KA 186 | 260,000.00 |
| KA 187 | 325,000.00 |
| KA 188 | 260,000.00 |
| KA 189 | 310,000.00 |
| KA 190 | 260,000.00 |
| KA 191 | 400,000.00 |
| KA 192 | 450,000.00 |
| KA 193 | 219,450.00 |
| KA 194 | 369,900.00 |
| KA 195 | 140,000.00 |
| KA 196 | 260,000.00 |
| KA 197 | 260,000.00 |
| KA 198 | 250,000.00 |
| KA 199 | 290,000.00 |
| KA 200 | 200,000.00 |
| KA 201 | 260,000.00 |
| KA 202 | 660,000.00 |
| KA 203 | 360,000.00 |
| KA 204 | 50,000.00 |
| KA 205 | 210,000.00 |
| KA 206 | 500,000.00 |
| KA 207 | 220,000.00 |
| KA 208 | 437,527.86 |
| KA 209 | 605,000.00 |
| KA 210 | 680,000.00 |
| KA 211 | 867,979.27 |
| KA 212 | 160,000.00 |
| KA 213 | 300,000.00 |
| KA 214 | 290,000.00 |
| KA 216 | 260,000.00 |
| KA 217 | 240,000.00 |
| KA 218 | 310,000.00 |
| KA 219 | 200,000.00 |
| KA 220 | 200,000.00 |
| KA 221 | 510,000.00 |
| KA 222 | 1,531,000.00 |
| KA 223 | 200,000.00 |
| KA 224 | 260,000.00 |
| KA 225 | 200,000.00 |
| KA 228 | 385,000.00 |
| KA 229 | 265,000.00 |
| KA 232 | 150,000.00 |

| | |
|---|---|
| KA 233 | 300,000.00 |
| KA 234 | 125,000.00 |
| KA 235 | 450,000.00 |
| KA 236 | 225,000.00 |
| KA 237 | 250,000.00 |
| KA 238 | 200,000.00 |
| KA 239 | 350,000.00 |
| KA 240 | 50,000.00 |
| KA 241 | 150,000.00 |
| KA 242 | 150,000.00 |
| KA 243 | 250,000.00 |
| KA 244 | 150,000.00 |
| KA 245 | 50,000.00 |
| KA 246 | 318,550.00 |
| KA 248 | 170,000.00 |
| KA 249 | 150,000.00 |
| KA 250 | 225,000.00 |
| KA 251 | 160,000.00 |
| KA 252 | 235,000.00 |
| KA 253 | 160,000.00 |
| KA 254 | 150,000.00 |
| KA 255 | 185,000.00 |
| KA 256 | 161,409.22 |
| KA 257 | 115,000.00 |
| KA 258 | 100,000.00 |
| KA 259 | 160,000.00 |
| KA 260 | 260,000.00 |
| KA 261 | 220,000.00 |
| KA 263 | 50,000.00 |
| KA 264 | 1,150,000.00 |
| KA 266 | 300,000.00 |
| KA 267 | 150,000.00 |
| KA 269 | 100,000.00 |
| KA 270 | 200,000.00 |
| KA 271 | 50,000.00 |
| KA 272 | 50,000.00 |
| KA 273 | 60,350.00 |
| KA 274 | 50,000.00 |
| KA 275 | 50,000.00 |
| KA 276 | 50,000.00 |
| KA 277 | 50,000.00 |
| KA 278 | 50,000.00 |
| KA 279 | 50,000.00 |
| KA 280 | 50,000.00 |

**91,700,206.52**

# மனுக்குலத்தின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு.

இன்று எல்லா வகையிலும் இறுக்கமான ஒரு காலத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம், எங்களுடைய ஏக்கங்கள், ஏமாற்றங்கள், எதிர்பார்ப்புகள் சிதைந்த நிலையில், எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று நிகழ்காலத்திலேயே நம் வாழ்வு சுக்கு நூறாக உடைந்து சிதறும் தன்மைகளைக் கண்முன்னே கண்டு, பீதியிலும் பயத்திலும் அச்சத்திலும், போராட்டத்திலும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். எம்மை சுற்றியிருப்பவர்களை நம்ப முடியாமலும் நம்பாமலும் வாழமுடியாமலும் தவித்துக் கொண்டிருக்கும் மனநிலையிலேயே நாம் அனைவருமே உணர்ந்தும், உணராததுபோல் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். உலகத் தலைவர்கள், நாட்டுத் தலைவர்கள் நாட்டு அதிகாரி, வல்லமையுள்ளவர்கள் தமக்குக் கீழ் இருப்பவர்களை பணயம் வைத்து, தம்மையும் தமது குடும்பங்களையும் வளர்தெடுப்பதில் குறியாக இருக்கிறார்கள். ஆனால் மக்களோ எம்மையும் நாட்டையும் பொறுப்பேற்றவர்கள் வளமான வாழ்வு வாழ உதவி புரிவார்கள் என காத்துக்-கொண்டிருக்கிறார்கள். ஆனால், பொறுப்பேற்றவர்களோ அவர்களின் வாழ்க்கையை எதிர்பார்ப்பைச் சிதைத்து, நம்பிக்கைத் துரோகம் புரிவதில் கைதேர்ந்தவர்களாக, பலவீனமானவர்களை அழித்து, தம்மை பலசாலிகளாகக் காட்டுவதில் போலி வீரர்களாகவும் நயவஞ்சகர்களாகவும் தமக்கிடையே போட்டியிட்டுக்கொள்வதை காணும்போது மிருகங்கள் தவறி மனித பிறவி கொண்டனரோ என சிந்திக்கத் தோன்றுகிறது. மக்களை, போதை வஸ்துகள், குண்டுகள் போன்ற வேறு வழிகளிலும் வாழ்வை அழித்து கொலை செய்கின்றனர். தன் அயலானை சூரையாடி, அழித்து அதில் இன்புறுபவன் இறுதி நாளில் இறைவன் முன் தோன்றும் காலம் வரும். அப்போது அவனின் நிலை என்ன? இவ்வுலக வாழ்நாள் குறுகியது. மறுஉலக வாழ்வு நீண்டது. குறுகிய கால வாழ்க்கை முறை நீடிய கால வாழ்வுக்குரியதாக மாற்றமடைகிறது. நாம் உயிர்ப்பை உரிமையாக்கிக்-கொள்கிறோம். தன் அயலானின் வாழ்வைச் சிதைத்து கொலை செய்து இன்புறுபவன் நீண்ட கால தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாகி நரக வேதனையில் தள்ளப்படுவான். இயேசுவின் உயிர்ப்பில் பங்கு கொள்ள அவனால் முடியாது போகிறது. நீண்ட கால வாழ்வுக்குரிய உயிர்ப்பு சிறந்ததா? நீண்ட கால அழிவுக்குரிய நரக தண்டனை சிறந்ததா? சிந்திப்போம்?



திருமதி. அனஸ்லின்



அன்னை யூப்ரேசியா

# 24.4.2021 அன்னை யூப்ரேசியாவின் திருநாளை கொண்டாடுகின்றோம். 1869ம் ஆண்டு இலங்கை மண்ணில் எமது சபை உருவாகி இன்று அகில உலகமும் 152வது ஆண்டை நினைவு கூறுகிறது!

## சர்வதேச தேவ அழைத்தல் தினம்

ஆக்கம்: அருட்.சகோ. மாகிறட் ஜெபமாலை R.G.S

### அழைக்கப்பட்டவர்கள்

ஒவ்வொரு படைப்பையும் இறைவன் ஒரு குறிக்கோளோடு படைத்திருக்கிறார். அக் குறிக்கோளையே இறைவனின் அழைப்பு என்று கூறலாம். ஒருவர் உச்சி வெயிலில் சுட்டெரிக்கும் நடுப்பகலில் வயற்புறமாக நடந்து போனார். வயலில் மெல்லிய பூசணிச் செடிகளில் பெரும்பெரும் பூசணிக் காய்கள் காய்ந்து கிடப்பதைப் பார்த்து, மெல்லிய செடிகளில் இவ்வளவு பெரிய காய்களா! என்று அதிசயித்தார்.

வயலோரத்தில் நின்றது பெரிய புளிய மரம். அதில் சின்ன சின்ன புளியம் பழங்கள் கொத்துக் கொத்தாய் சாய்த்து கிடப்பதைப் பார்த்து, இவ்வளவு பெரிய மரத்தில் இத்தனை சிறிய பழங்களா! என்று வியந்து கடவுள் ஏன் இப்படி தாறுமாறாகப் படைத்திருக்கிறார்? என்று தன்னையே கேட்டுக் கொண்டு நிழலில் இளைப்பாற புளிய மரத்தின் கீழ் நின்றார். பொத்தென்று ஒரு புளியங்காய் அவர் தலைமீது விழுந்தது. தலையில் வலித்த இடத்தை தடவிக்கொடுத்துக்கொண்டே பூசணி போன்ற பெரிய பழங்களை நீ படைத்திருந்தால், என் தலை இந்நேரம் இரண்டாக பிளந்திருக்கும். உமக்கு கோடி நன்றி! என்று வாழ்த்திக்கொண்டே நடந்தார். படைப்பு ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அக்குறிக்கோளை நிறைவேற்றவே கடவுள் படைப்புக்களை அழைக்கிறார்.

மனிதர் ஒவ்வொருவருக்கும் இத்தகைய வாழ்க்கை குறிக்கோள் இறைவனின் படைப்புத்திட்டத்தில் அடங்கி இருக்கிறது. சாமுவேலை தனது இறைவாக்காளராக உலகில் பணிபுரிய இறைவன் அழைத்தார் என்பது (1சாமு 3:21) என்னும் வாசகம் தெளிவாக உணர்த்துகிறது.

சீடர் அந்திரியாவை, இயேசுவின் திருத்தூதர் குழுவில் சேர்ந்து இயேசுவுக்கு இவ்வுலகில் சான்று பகிர்வதற்காக கடவுள் அழைத்தார். (யோவா 1:35:37)

சாமுவேலை இறைவாக்கு உரைப்பவராக அழைத்த இறைவன், அந்திரேயாவை கிறிஸ்துவின் திருத்தூதர்களில் ஒருவராகி இரத்தம் சிந்தி அவருக்கு சாட்சி பகிர அழைத்த இறைவன், நம் ஒவ்வொருவரையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு படைத்து, அந்நோக்கத்தை நிறைவேற்றி வாழ்வதற்கு அழைக்கிறார் என்பதை நாம் உணர்ந்து மகிழ்ந்திட வேண்டும்.

ஆனால், ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறைக்கு, அவ் வாழ்க்கைக்குள்ளேயே ஒரு குறிப்பிட்ட பணிக்கு இறைவன் அழைப்பு விடுக்கும்போது, அவ்வழைப்பை ஏற்று நடப்பதில் நான்கு கட்டங்களை நாம் கடக்க வேண்யிருக்கிறது என்பதையும் நாம் தெரிந்து கொள்வது அவசியம். இதற்கு எடுத்துக்காட்டாக சாமுவேலின் முதல் கட்டம்; அழைப்பு. கடவுளிடமிருந்து அழைப்பு வர வேண்டும். ஆண்டவரின் இல்லத்தில் சாமுவேல் படுத்திருந்த போது, சாமுவேல் என்று ஆண்டவர் அழைத்தார். (1சாமு 3:3)

### இரண்டாம் கட்டம்: தவிப்பு

ஆண்டவரின் அழைப்பை ஏற்கலாமா, வேண்டாமா, ஏற்றால் அதன்படி சிறப்பாக வாழ முடியுமா? உண்மையில் இது ஆண்டவரின் அழைப்பு தானா?, என்றெல்லாம் நாம் தவிக்கலாம். சாமுவேலை ஆண்டவர் மூன்று வேலை அழைத்ததும் சாமுவேலால் அது இறைவனின் அழைப்பு தான் என்பதைப் புரிந்துக்கொள்ள முடியாது தடுமாறினார். ஆகவே, ஏலியிடம் சென்று தனது ஐயத்தைப் போக்கிக்கொண்ட பிறகே சாமுவேல் ஒரு முடிவுக்கு வந்தார். (சாமு 3:9)

### மூன்றாம் கட்டம் ஏற்பு:

இறைவனின் அழைப்புத்தான் என்று உறுதி செய்துகொண்ட பிறகு, அதை ஏற்பதும், ஏற்க மறுப்பதும் மனிதச் சுதந்திரம். கடவுள் தம் சுதந்திரத்தை மதிப்பதால், எந்த அழைப்பையும் அல்லது தமக்கென்று அவர் வகுத்திருக்கும் எந்த நற்திட்டத்தையும் நம்மீது திணிக்க மாட்டார். சாமுவேல் சுதந்திரமாகத்தான் 'ஆண்டவரே, பேசும். உம் அடியான் கேட்கிறேன்' (1சாமு 3:9) என்று சொல்லி அழைப்புக்குப் பணிந்தார்.

### நான்காம் கட்டம்: அர்ச்சிப்பு:

இதுவே இறுதிக்கட்டம். இறைவனின் அழைப்பை ஏற்று, தம் வாழ்நாள் முழுவதும் அதன்வழி செல்பவர்கள் கடவுளின் ஆசிரால் இவ்வுலகத்திலேயே அர்ச்சிக்கப்படுகிறார்கள். சாமுவேலுக்கும்இதுநிகழ்ந்தது என்பது 'சாமுவேல் வளர்ந்தான், ஆண்டவர் அவனோடு இருந்தார். சாமுவேலது வார்த்தை எதையும் அவர் தரையில் விழவிடவில்லை. 1சாமு 3:19) என்னும் வாக்கியங்கள் உறுதி செய்கின்றன.

(1341 - 1390) இம்மாத புனிதர்

# புனித சியன்னா கத்தரின்



சியன்னாவில் பிறந்த இவள் ஏழைகளையும் துன்புற்றவர்களையும் சிறு வயதிலிருந்தே மிகமிக அன்பு செய்தாள். இவளுடைய தந்தை பல பீப்பாய்களில் இரசம் வைத்திருந்தார். ஒரு பீப்பாயில் இருந்த இரசத்தை ஏழைகளுக்கு வழங்க இவள் தன் தந்தையிடம்அனுமதி கேட்டுப் பெற்றாள். எடுக்க எடுக்க இரசம் குறையவே இல்லை. வீட்டின் பிரதான வேலைக்காரன் ஒரு மாதத்திற் குபின் அதைத் திறந்து பார்த்தான். இரசம் அப்படியே இருந்தது. இவள் தனது கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்தவள். மண முடிக்க இவள் இணங்காததால், வீட்டில் பல உபத்திரவங்கள் கொடுத்தனர். இறுதியில் பெற்றோர் இவளின் விருப்பப்படியே விட்டு விட்டனர். 18ஆம் வதில் புனித சுவாமிநாதரின் மூன்றாம் சபையில் சேர்ந்தாள்.

கொள்ளை நோயின் போது இவள் வீரத்துடன் நோயாளிகளுக்கு சேவை செய்தாள். இரு குருக்களுக்கு புதுமையாக சுகம் பெற்றுக்கொடுத்தாள். தங்களுக்காக செபிக்க மறுத்த கன்னெஞ்சரான பாவிகளுக்காக இவள் இவைிடாது செபித்து தவம் செய்தாள். இவள் மனந்திருப்பிய பாவிகளின் பாவசங்கீர்த்தனத்தைக் கேட்க போதிய குருக்கள் இல்லை. எனவே பாப்பானவர் இவள் குணப்படுத்திய இரு குருக்களையும் அதற்கென நியமித்தார். அவ்விரு குருக்களும்இரவும் பகலும்பாவசங்கீர்த்தனம் கேட்டார்ள். அத்தனை ஏராளமான பாவிகளை இவள் மனந்திருப்பினாள். 28ஆம் வயதில் இவள் திருக்காய வரம் பெற்றாள். எனினும் இவள் கெஞ்சிக் கேட்டமையால் காயங்கள் பிறர் கண்ணில் தெரியாமல் இருக்க சோதனைகள் வந்தது. நரக பாதாளத்தில் தான் விழ இருப்பதாக நினைப்பாள் என்றாலும் செபித்து தாழ்ச்சியுடனும் பணிந்த மனதுடனும், கடவுள் மீது நம்பிக்கை வைத்து, வீரத்துடன் போராடி, வெற்றி பெறுவாள்.

இவ்வித பயங்கர போராட்டத்திற்குப் பின் இயேசு அவளை ஒருமுறை சந்தித்தார். 'என் தேவ கர்த்தாவே! நான் எல்லோராலும் கைவிடப்பட்டு போராடுகையில் நீர் எங்கு இருந்தீர்?" என்று அவள் வினவ 'நான் உன்னுடன்தான் இருந்தேன்" என்ற பதில் கிடைத்தது. 'அந்த அகத்தத்தின் மத்தியிலா நீர் இருந்தீர்?" என்று அவள் கேட்டாள். 'இந்த அசுத்த சோதனைகள் உனக்கு வெறுப்பைக்கொடுத்தன. மன வேதனையைத் தந்தன. போராடி பேறு பலன்களை நீ சம்பாதித்தாய், வெற்றி கிடைத்தது எனது பிரசன்னத்தாலேயே" என்று ஆண்டவர் கூறினார்.

கர்தினால்களும், அரசர்களும் திருச்சபையில் பெரும் பிளவு உண்டு பண்ணினர். இப்பெரும் தீமையைத் தடுக் கஇவள் முயன்றாள். 'ஆண்டவரே! என் உடலில் சகல பகுதிகளும் என் எலும்புகள் அனைத்தும் நொறுக்கப்பட்டு தூளாகட்டும். ஆனால் உமது திருச்சபை அழகுடனும் பொலிவுடனும் ஜொலிக்கச்செய்யும்" என்று அடிக்கடி சொல்வாள். அவிஞன் நகரில் இருந்த பாப்பானவர், இவளது பெரும் முயற்சியால் உரோமைக்குத் திரும்பினார். பாப்பானவரது வேண்டுகோளுக்கு இணங்க தனது உயிரையே கடவுளுக்கு பலியாகக் கொடுத்தாள். மூன்று மாதங்களாக சொல்ல முடியாத மரண அவஸ்தைப்பட்டு தனது 33ஆம் வதில் இறந்தாள்.

சிந்தனை: உனது பழைய பாவங்களின் நினைவு வரும் போது கடவுளது அளவற்ற இரக்கத்தை நினைத்துப் பார். பாவங்களின் நினைவு உன்னை மனந்தளரச் செய்யாது. அதற்கு மாறாக இரட்சகரின் இரக்கத்திலும் பேறு பலன்களிலும் நீ நம்பிக்கை வைக்க அது உன்னைத் தூண்டும்.


செபம்: ஆண்டவரே, சத்திய திருச்சபையானது அழகுடனும், பொலிவுடனும் விளங்கச் செய்யும்.

## 07 மனமே ஓ மனமே

அவற்றுக்கு ஓர் அர்த்தம் தரும் விளக்கம் கொடுப்பது நம்முடைய மனதுதானே? மற்றவர்கள் பார்க்காத ஒன்றை நான் பார்ப்பதாக நம்பினால், அல்லது பிறர் கேட்காததை நான் கேட்பதாக உணர்ந்தால், என்னுடைய மனதில் ஏதோ கோளாறு என்று சொல்வார்கள் அல்லவா? ஏனெனில், மற்றவர்கள் உணரும் உண்மைக்குப் புறம்பாக நான் நம்பினால் சமுதாயம் என்னைப் பைத்தியம் என்று கணிக்கும்.

எனவே, நம்முடைய மனதும் அதன் கருவியாக உதவி செய்யும் மூளையும் மிகப் பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டியவை. அறிவுப்பூர்வமாகச் சிந்திப்பதற்கும் நமக்கு உதவிசெய்யும் உணர்வுகளை வளர்த்துக் கொள்வதற்கும் நாம் பயிற்சி செய்தல் வேண்டும். மனிதத்திற்கு ஒவ்வாத செயல்களைத் தவிர்ப்பதற்கும், சிறந்த மதிப்பீடுகளின்படி வாழ்வதற்கும் நாம் முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் நம்முடைய சாதனைகளுக்கும், தோல்விகளுக்கும், நம்முடைய செயலாக்கத்திற்கும், ஆர்வமற்றச் சோம்பேறித்தனத்திற்கும் நம்முடைய மனது அடிப்படைக் காரணம். மனது சிறப்பாகச் செயல்பட்டால், அறிவு சம்பந்தப்பட்ட செயல்களையும் உடல் சம்பந்தப்பட்ட வேலைகளையும் ஒழுங்காகச் செய்ய முடியும்.இல்லாவிட்டால், எதை ஞாபகம் வைத்திருக்க வேண்டுமோ, அவை மறந்து விடுகிறது. எவற்றை மறக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ, அவை நம் நினைவிலிருந்து அகல மறுக்கிறது. தூங்கி விழுவதற்கும், தூக்கம் வராமலிருப்பதற்கும் மனது ஒரு முக்கிய காரணம்போல் தோன்றுகிறது. ஒன்றை விரும்புவதும் வெறுப்பதும் நம் மனதில் தோன்றும் எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் சார்ந்து இருப்பது உண்மைதானே?

மனதைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், நம்முடைய வாழ்க்கை சுமுகமாக அமைவதற்குத் தேவையான அளவு தெரிந்து கொண்டால் நமக்கு நல்லது தானே! ஆகவே, இனி வரும் கட்டுரைகளில், மனதைப் பற்றியும், நம் வாழ்க்கையில் வரும் பிரச்சினைகளைப் பற்றியும், அவற்றை எப்படி அணுக வேண்டும். பிறரோடு கொள்ளும் உறவு எப்படி இருக்க வேண்டும் என்று அலசுவோம். உடல், உள்ளம், உறவு, ஆன்மீகம் முதலிய நான்கிற்கும் முக்கியத்துவம் கொடுத்து நம் வாழ்வில் எப்படி முன்னேறலாம் என்று யோசித்துப் பார்ப்போம்.

## மணமகள் தேவை

கொழும்பு, றோமன் கத்தோலிக்கம் 1984, 5' 7", Engineerராக பணிபுரிந்து U.Kல் கல்வி கற்கும் மகனுக்கு பெற்றோர் படித்த, மெலிந்த நற்குணமுடைய பெண்ணை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு: 0771198697

(AD 3449)


## 03 எம் இறைவா...

உடைத்தெறியப்பட்ட திருச்சுரூபங்கள் அனைத்தும் தூய அந்தோனியார் சுரூபம் தவிர்ந்ததேயாகும். ஆலய முகப்பிலே காணப்பட்ட அன்னை மரியாளின் சுரூபம் உடைந்தெறிந்து காணப்பட்டது. ஆனால் தூய அந்தோனியாரின் சுரூபத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லை. அன்னை தன்னைத் தியாகம் செய்து ஏனையோரைப் பாதுகாத்தார்) அழைத்த இறைவனிலே நம்பிக்கை வைத்து அவரின் உடனிருப்பை உணர்ந்து தந்தையின் திருவுளத்தின்படி வாழ்வோம். இதைத்தான் எமது உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களும் அனைத்து ஊடகங்களிலும் வெளிப்படுத்தி அமைதியை நிலைநாட்டியுள்ளார் என்றால் மிகையாகாது.

# இறைஇரக்க ஞாயிறு

– திருத்தந்தையின் மறையுரை



உயிர்த்த இயேசு தன் சீடர்களுக்குத் தோன்றி, அவர்களின் கலக்கமுற்றிருந்த இதயங்களுக்கு ஆறுதலை வழங்கியதுடன், அவர்களுக்குள் உயிர்ப்பை உருவாக்கினார் என தன் மறையுரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இறை இரக்கத்தின் ஞாயிறையொட்டி, சித்திரை 11, ஞாயிறன்று, வத்திக்கானுக்கு அருகில், இறைஇரக்கத்தின் ஆண்டவர் கோவில் என அறியப்படும், Santo Spirito in Sassia கோவிலில் காலை திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உயிர்த்தபின் தன் சீடர்களுக்கு பலமுறை காட்சியளித்த இயேசு, அவர்களின் மனநிலைகளில் ஊக்கமளித்து அவர்களின் வாழ்வு மாறுவதற்கு உதவினார் என்று கூறினார். ஏற்கனவே தான் கூறிய வார்த்தைகளும் தன் நடவடிக்கைகளும் தன் சீடர்களிடம் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தவில்லையென்பதை அறிந்திருந்த இயேசு, தன் உயிர்ப்பின் வழியாக, அவர்களை இரக்கத்தில் மேலே எழுப்புகிறார், அவர்களும் தாங்கள் பெற்றுக்கொண்ட இரக்கத்தினால் இரக்கமுடையவர்களாக மாறினர் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசு தன் சீடர்களுக்கு அமைதி, தூய ஆவியார், தன் காயங்கள், என, மூன்று கொடைகளை வழங்கினார் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவை, தனியாக விட்டு ஓடி ஒளிந்ததோடு, கவலையாலும், தாங்களும் துன்புறுத்தப்படுவோம் என்ற அச்சத்தாலும், அறையில் அடைபட்டுக் கிடந்த சீடர்களை நோக்கி இயேசு கூறும் வார்த்தைகள், உங்களுக்கு அமைதி உரித்தாகுக, என்பதே எனச் சுட்டிக்காட்டினார்.

“உங்களுக்கு அமைதி உரித்தாகுக! என தன் சீடர்களை நோக்கி உரைத்த, உயிர்த்த இயேசு, அதனோடு, தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்” (யோவா 20:21) எனக்கூறி, அவர்களை உள்மனச் சங்கிலிகளிலிருந்து விடுவித்து, அவர்களுக்குரிய பணியையும் வழங்கினார் இயேசு என்றுரைத்த திருத்தந்தை, நமக்கும் விடுதலை வழங்கும் இயேசு, நம்மிலும் சீடருக்குரிய பணியை எதிர்பார்க்கிறார் என எடுத்துரைத்தார்.

தன்னை கைவிட்டு ஓடியவர்களை குற்றம் சாட்டாமல், அவர்கள் மீது முழு நம்பிக்கை வைத்து அவர்களிடம் மறைபரப்புப் பணியை ஒப்படைத்த இயேசுவுக்கு நாம் அனைவரும் முக்கியத்துவம் நிறைந்தவர்கள், ஏனெனில் அவரைப் பொருத்தவரையில், பயனற்றவர்கள் என்று எவரும் இல்லை என, மேலும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

கலங்கியிருந்த இதயங்களுக்கு முதலில் அமைதியை வழங்கிய உயிர்த்த இயேசு, அவர்களுக்கு இரக்கத்தை வழங்குவதன் அடையாளமாக தூய ஆவியாரை, பாவ மன்னிப்பிற்கான கொடையாக அளித்து, அவர்களின் பாவ மனவுறுத்தல்களிலிருந்து விடுதலை வழங்கியதை நினைவில் கொண்டவர்களாக, இரக்கம் எனும் கொடைக்காக இறைவேண்டல் செய்து, ஒப்புரவு எனும் அருளடையாளம் வழி, இறை இரக்கத்தையும், மன்னிப்பையும் பெறுவோம் என விண்ணப்பித்தார் திருத்தந்தை.

அமைதியை தந்து நமக்கு புது வாழ்வை வழங்கியும், மன்னிப்பின் வழியாக நம் மனநிலைகளை உயர்த்தியும் உள்ள இயேசு, இரக்கத்தின் மூன்றாவது கொடையாக, தன் காயங்களைக் காண்பிக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவர் தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள் (1பேதுரு 2:24, எசா 53:5). என்று, தூய பேதுருவும் இறைவாக்கினர் எசாயாவும் கூறிய வார்த்தைகளை நினைவுறுத்தி, காயங்களால் எவ்வாறு குணம்பெறமுடியுமென்ற கேள்வியையும் முன்வைத்தார்.

நம் காயங்களையும் பலவீனங்களையும் தன் உடலில் சுமந்து, தன் அன்பை வெளிப்படுத்திய இறைவனின் காயங்கள், நமக்கும் அவருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருந்து, நமக்குள்ளிருக்கும் இருளை அகற்றுவதற்கு உதவும் வகையில், நாமும் புனித தோமாபோல் அவரின் காயங்ககளைத் தொட்டு, என் ஆண்டவரே என் கடவுளே (யோவா 20:28). என அறிக்கையிட்டு, நம் கிறிஸ்தவப் பயணத்தைத் துவக்குவோம், என உரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். விண்ணரசில் தங்களுக்கு எந்த இடமென தங்களுக்குள்ளேயே விவாதம் செய்த அதே சீடர்கள் (மத் 10:37 லூக் 22:24), இயேசுவின் இரக்கத்தைப் பெற்றபின் தாங்களும் இரக்கமுள்ளவர்களாக மாறி, தங்களுக்குரியதையெல்லாம் மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டதுடன், மன்னிப்பையும் கையிலேந்தி, தாங்கள் தொட்ட இயேசுவின் காயங்களின் துணைகொண்டு, மற்றவர்களின் காயங்களையும் குணப்படுத்துபவர்களாக மாறினர் என, மறையுரையில் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் காயங்களால் தொடப்பட்டுள்ள நாம், பிறர் காயங்களைக் குணப்படுத்த, நம்மையேத் தாழ்த்தியுள்ளோமா என்பது குறித்த கேள்வியை நமக்குள்ளேயே இன்று எழுப்புவோமென்ற விண்ணப்பத்தை முன்வைத்த திருத்தந்தை, இரக்கத்தைப் பெற்றுள்ள நாம் இரக்கமுள்ளவர்களாக மாறியுள்ளோமோ, இறைவனின் உடலை உண்டு பலம்பெற்றுள்ள நாம், பிறரின் பசியை போக்க உதவியுள்ளோமா, என ஆன்ம சோதனைச் செய்வதுடன், இரக்க நடவடிக்கைகள் இல்லாத விசுவாசமும் அன்பும் பயனற்றவை என்பதை உணர்வோம் என கேட்டுக்கொண்டார். விசுவாசம் என்பது ஒருவழிப் பாதையல்ல, அது, நாம் பெற்ற இரக்கத்தையும், அமைதியையும், மன்னிப்பையும், இயேசுவின் காயங்களையும் பிறருடன் பகிர்ந்து, இரக்கத்தின் நற்செய்தியை பிறருக்கு அறிவிக்கும் பலத்தை நமக்கு வழங்கட்டும் என வேண்டுவோம் என தன் இறைஇரக்க ஞாயிறு மறையுரையை நிறைவுசெய்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# ஹீட் ஸ்ட்ரோக் - வெப்ப வாதம்

## கடும் கோடையில்! நினைவில் கொள்ள வேண்டியவை!

1. நிழல் 2. தண்ணீர் 3. ஓய்வு

| வேண்டியவை | தவிர்க்க வேண்டியவை |
|---|---|
| 1. தாகம் எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் போதுமானஅளவு தண்ணீர் குடிக்க வேண்டும். | 1. வெயிலில் வெளியே செல்ல வேண்டாம் முக்கியமாக காலை 11 மணியிலிருந்து மாலை 4 மணிவரை |
| 2. லேசான வெளிர் நிற ஆடையணிதல், பாதுகாப்பு கண்ணாடி, குடை, தொப்பி, மற்றும் காலணிகளை பயன்படுத்த வேண்டும். | 2. உஷ்ணம்அதிகமாக இருக்கும்போது கடினமான உழைப்பை தவிர்க்கவும். |
| 3. பிரயாணத்திற்கு தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டும். | 3. மதுபானம், டீ, காபி, போன்ற பானங்களைத் தவிர்க்கவும். |
| 4. வெளியே வேலை செய்யும்போது தொப்பி, குடை ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும். | 4. உயர்ந்த புரதசத்து (ப்ரோடீன்) வகை உணவை தவிர்க்கவும் |
| 5. தலை, கழுத்து, முகம் மற்றும் கால்களின் மேல் ஈரத் துணிகளைப் பயன்படுத்தலாம். | 5. உப்பில்லாத உணவையும் தவிர்க்கவும் |
| 6. மயக்கமாக, சோர்வாக இருந்தால் மருத்துவரைச் சந்திக்கவும். | 6. நிறுத்தப்பட்ட வாகனங்களில் பிள்ளைகள், செல்லப் பிராணிகளை விட வேண்டாம். |
| 7. லஸ்ஸி, கஞ்சி, பழச்சாறு, மோர் போன்றவற்றை பருகவும். | |
| 8. மிருகங்களை நிழலில் வைத்து அதிகமாக தண்ணீர் கொடுக்கவும். | |
| 9. வீட்டை குளிராக வைக்க ஜன்னல்களை இரவில் திறந்து, திரைகளைப் பயன்படுத்தவும். | |
| 10. குளிர்ந்த தண்ணீரில் அடிக்கடி குளிக்கவும். | |



அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...




# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிநுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்



### திருமண சேவைகள்

- ✦ திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- ✦ திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**













| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |





| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |








அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்